ஓம்.

வெண்தாமரை இதழ். 1

# மௌந வாக்கு.

## (The Voice of the Silence)

in Tamil.

தமிழ் மொழிபெயர்ப்பு

நாராயண அய்யர்,

மதுரை ப்ரஹ்மஞானசபை ப்ரெஸிடெண்ட்.

அன்பளிப்பு
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
சீர்காழி.
(1982)
986

விவேகபாநு அச்சியந்திரசாலை,

மதுரை.

1911.

# இதன் பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| மௌநவாக்கு | 3-ம் பக்கம். | |
| இரண்டு மார்க்கங்கள் | 35 | ,, |
| ஏழு வாயில்கள் | 65 | ,, |

ஓம்.

# மௌந வாக்கு.

---

## நூன்முகம்.

இஃது உயர்நலமமைந்த ஞானமுறை நூல். ஹிமாசலத்தின் கண்ணுள்ள ஞானசபையாகிய வெள்ளியம்பலத்தி லொருவராகிய மஹாத்மா ஹைலேரியான் என்பார் ஹெலினும்பாள் அம்மையார் மூலமாய் இக்காலத்திய ஜனங்களின் பிரயோஜனார்த்தமாக ஆங்கில பாஷையில் இந்நூலை வெளியிட்டிருக்கின்றார். இந்நூலின்கண் உயர்ந்த ஞானவிஷயங்களும் நுட்பமான யோகவிஷயங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் வெளியிடப்பெற்றிருக்கின்றன. இதனருமையையும் பெருமையையும் ஆங்கிலந் தெரியாத ஏனையர்களும் அறிந்தநுபவித்து ஞானமுறையி லொழுகுமாறு இதைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன்.

ஓம் தத் ஸத்.

ப. நாராயணன்.

---

ஓம்.

## முதல் பிரகரணம்.

# மௌந வாக்கு.

---

கீழான சித்தி முறைகளின் அபாயங்களை அறி யத்தாநக்த அடியில் வரும் உபதேசங்கள் ஏற்பட் டன.

சித்திகள் இருவகைத்து. ஒன்று கீழானது, இழி வானது, காமமநத்தின் மலர்ச்சியால் உண்டாக்கப் பெற்றது. மற்றொன்று, மநோநிக்கிரகத்தால், உண்டாகும் ஆத்ம சக்திகளின் மலர்ச்சியாம். இப் பின்னதைப்பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் அடியில் வருமாறு உபதேசிக்கின்றார்:—

“யோகாப்பியாச முள்ளவர்களாய், இந்திரியங் களை அடக்கி, மநத்தை ஒருமுகப்படுத்தி என்னி டம் ஸ்திரமாய் வைத்து, ஒழுகுகின்றவர்களை, சித் திகள் பணிவிடை செய்ய எப்போதும் காத்திருக் கொண்டிருக்கின்றன.”

அதன் உண்மையை அறியவும், மௌநம் கடந்த வாக்கை அதாவது நாதத்தொனியைக் கேட்கவும் விரும்புவான், தாரணையின் * இயல்பை அறியற்பாலன்.

சீஷன், இந்திரிய சம்பந்தமான விஷயநுகர்ச்சியில் வெறுப்புற்று, இந்திரியங்களின் இராஜாவை நாடவேண்டும். அந்த இராஜா என்பது சங்கற்பங்களையும் பிரமையையும் உண்டுபண்ணும் மநமாம்.

மநம் சத்தைக் கொல்லும் தன்மையது, உண்மையை மறைத்து மருளை உண்டுபண்ணும் தன்மையது.

சீஷன், அந்த சத்தை(உண்மையை)க் சொல்லும் மநத்தைக் கொல்லவேண்டும்.

கனவிற் காணும் உருவங்கள் நனவில் பொய்யாகத் தோன்றுமாறு போல, தன் உருவமும் பொய்

* இந்திரியங்கள் சம்பந்தமான வெளி நோக்கான பிரபஞ்சத்தின் பார்வையைத் தவிர்த்து, அந்தர்முகம் பெற்று, உள்ளத்தில் யாதேனும் ஒரு லக்ஷியத்தில், மநம் ஐகாக்கிரியம் பெறும்படி செய்தல், ஒரே பிடியாய் ஒருமுகப்படும்படி செய்தல் தாரணை எனனப்படும்.

யாகச் சிஷனுக்குத் தோன்றுமாகில்; பன்மை (பல வேற்றுமைகள்) தோன்றாமல் இருக்குமாகில், அப்போது, ஒன்றை அறிவான். அதுவே வெளிநோக்குதலைக் கொல்லும் தன்மையதாகிய உள்ளத்தில் தொனிக்கும் நாதம்.

அது தோன்றினல்தான், சிஷன் பொய்யான பிரபஞ்சமாகிய பிரமையைத் துறப்பான், மெய்யான நிலையை அடைவான்.

மநம் உண்மையைப் பார்க்குமுன், உள்ளத்தில் சாந்தமும் நேர்மையும் அமையவேண்டும். ஊனக் கண்கள் வெளிமயக்கத்தைப் பாராத் தன்மையைப் பெறவேண்டும்.

மநம் உண்மையைக் கேட்குமுன், இந்த ஸ்வரூமான மனிதன், பெரிய ஆரவாரத்தை நுண்ணிய குசுகுசுப்பைப் போலவும், யானை முழக்கத்தைப் பொன் வண்டின் கிணு கிணு என்ற ரீங்காரம்போலவும், சிறிய ஒலியாயினும் பேரொலியாயினும், இவைகளை ஒரே மாதிரியாகக் கேட்காத் தன்மையைப் பெறவேண்டும்.

மநம் உண்மையை அறியுமுன், அதன் ஸ்மரணையைக் கொள்ளுமுன், குயவன் மநத்தின்கண் இனிவனையப்பெறும் பாண்டத்தின் உருவம் ஒருமைப்பட்டு அமையுமாறு போல, உள்ளத்தின்கண் நிற்கின்ற பேசாத நாதத்துடன் (மௌந வாக்குடன்) ஒருமைப்படவேண்டும்.

அதனால், அப்போதுதான், மநம்கேட்கும். மநம் ஸ்மரணை பெறும். அப்போது, மௌநம் கடந்த நாதமானது உட்காதுகேட்கும்படி சிஷன் உள்ளத்தில் அடியில் வருமாறு வசநிக்கும்:—

1. உலக வாழ்வின் உயர்நலத்தில் மூழ்கி நீ இருக்கும்போது, உன் மநம் மகிழ்ந்து புன்னகை கொள்ளுமாகில், கூட்டில் அடைபெற்ற புழுப் போல ஊனுன உடம்பின்கண் இருப்புக்கொண்டு, உன் மநம் உவந்து களிப்பாய்க் கானம் செய்யுமாகில், மாயக் கோட்டையில் (சரீரத்தில்) உன் மநம் நொந்து அழுமாகில், உள்ளத்தில் தங்கும் உன் நாதனாகிய ஆத்மாவுடன் சம்பந்திக்கும் வெள்ளிபோன்ற நுண்ணிய நூலிழையை அறுத்தலில் உன் மநம்

டுயன்று போராடுமாகில், ஓ! சிஷனே! உன் மநம் உலகப்பற்றுள்ளதென அறிவாய்.

2. உலகக் கஷ்டங்களைக் கேட்க, (ஞான முறையில் பிரவேசிக்க எத்தனம் கொண்டு) எழும் உன் மநம் பிரியப்படுமாகில், உலகமென்ற மஹாமாயையின் ஆரவாரத்தைக் கேட்டு அதற்கிணங்கி ஒற்றுமைப்பட்டு உன் மநம் வசநிக்குமாகில், துன்பத்தினால் சொரியும் கொதிப்பான கண்ணீரைக் கண்டு பயந்தும், துக்கத்தின் அழுகை இரைதலில் உன் காது அடைபெறும் சமயத்தில், சுயநலம் என்ற ஓட்டின்கண் கூச்சமுள்ள ஆமை அவயவங்களை இழுத்துக்கொண்டு சுருங்குமாறுபோல, உன் மநம் இளகாமல் சுயநலம் கொண்டு உள் நோக்குமாகில், ஓ சிஷனே! மௌந நாதனை உறைவிடமாகக் கொள்ள உன் மநம் யோக்கியதையற்றது, தகாதது என அறிவாய்.

3. உன் மநம் மேன்மேலும் (உலகப்பற்றில்) பல மாய் விருத்தியாகிக்கொண்டு வரவும், சாவதானமான ஏகாந்தத்தை விட்டு, உன் மநம் வெளியேறியும் தன்னைக் காப்பாற்றும் கவசம் போன்ற அவ்வேகாந்த

நிலையைத் தவிர்த்தும், வெள்ளி போன்ற உலகப் பற்று என்ற நூலை வெளிக்கிளம்பச் செய்தும், விஷயங்களைக் கண்டு தீவிரமாய்ப் பாயுமாகில், ஆகாச அலைகளில் தன் பிரதிபிம்பத்தை நோக்கி மயங்கி, இதோ நான் என்ற அகங்காரச்சிந்தையைக் கொள்ளுமாகில், உன் மநம் பிரமையின் வலையில் சிக்கிக் கொண்டது எனத் தெரிவாய்.

4. சீஷனே! இவ்வுலகம் துக்கத்திற்கு இருப்பிடம். சோதனையான இந்த உலக வாழ்க்கை நெறியில் உன்னை மயக்கி, அவித்தை வசமாக்க, உன்னைப்பிடிப்பதற்குப் பொறிகளும்,கண்ணிகளும், அமைக்கப்பட்டிருக்கின்றன. நீ வேறு, நான் வேறு என்ற பிரமை சிந்தனையே இதற்குக் காரணமாம்.

5. அறிவிலியான சீஷனே! சத்திய ஜோதிஸ் உள்ள பூமி ஒன்று உள்ளது. நூலின்றியும், எண்ணெயின்றியும் ஜ்வலிக்கின்றதும், காற்றால் அணைக்க இயலாததுமான ஜோதிஸ் அது. அப்பூமியில் புகுமுன், சந்தியா வெளிச்சம் போன்ற நிலை ஒன்று உள்ளது அந்த சந்தியா வெளிச்சமுள்ள நிலைக்கு இந்த உலகம்

பயங்கரமானதும் துக்ககரமானதுமான வாயில் என்று அறிவாய்.

6. உயர்நலம் அமைந்த தர்மவிதியின் உபதேசம் யாதெனில், தத்துவ ஞானியாகுமுன் முதலில் தன்னைத் தான் அறியும் ஆத்மஞானியாகவேண்டும். ஆத்மாவை அறியவேண்டுமென்றால், தன்னை (அகந்தையை)த் துறக்கவேண்டும்; மமதையைத் தவிர்க்கவேண்டும். அதனால், காலஹம்ஸம் என்ற கம்பீரமான பக்ஷியின் இரு பக்ஷங்களின் மத்தியில் சாந்தமாய்த் தங்கலாம். அஜமாயும், மரணமற்றதாயும் கல்பகோடி காலங்கள் உள்ளதுமான ; "ஓம்" என்ற அந்தக் காலஹம்ஸத்தின் இறக்கைகளின் மத்தியில் தங்குதல் சுகமே! ஆம்! உண்மையில் சுகமே!.

7. அறிய விரும்புவாயாகில், பிராணாதாரமான அந்தப் பக்ஷியின்மேல் சவாரி செய்வாய். அதாவது பிரணவ உபாஸனை சொல்லுவாய். கர்மங்கள் உன்னை அணுகா. கோடாநுகோடி பாபங்களினின்று விடுபடுவாய்.

8. உண்மையாய் உன் ஆத்மாவை ரக்ஷிக்க விரும்புவாயாகில் உடலையும் ஊனையும் ஓம்பற்க. அதுபற்றிய உயிர்வாழ்வைத் தவிர்.

9. களைத்துச் சோர்வடைந்த பிரயாணியே! மூன்று பூமிகளின் 'அனுபவமானது உன் துக்கங்களின் முடிவை உண்டுபண்ணும், மருளை வசப்படுத்தும் தீரனே! இம் மூன்று பூமிகள் மூன்றுபிரஞ்ஞா நிலைகளாம். அவை ஜாக்கிரதை, ஸ்வப்நம், ஸுஷுப்தி என்ற அவஸ்தைகளாம். அவைகளைத் தாண்ட, 4-வதான பிரஞ்ஞா பூமி துரியம் என்பார்; அதற்கப்பால் 7 பிரஞ்ஞா பூமிகள் இருக்கின்றன. இப் பூமிகள் எல்லாம் நித்தியமான சாந்தநிலையின் பல படிகளாம்.

10. அவைகளின் பெயர்களை அறிய விரும்புவாயாகில் அவையாவன:—

11. முதல் பூமி என்பது அவித்யா ஸ்தானம். அதில் சரீரம் எடுத்து விழித்தாய்; பிறந்தாய்; அதில் ஜீவிக்கின்றாய்; இனி இறப்பாய்; வியாவகாரிகலோகம் இது.

12. இரண்டாம் பூமி, இனி நீ படித்துப் பழகி உண்மையை அறிய முயலவேண்டும் ஸ்தாநம். அதின்கண் நீ உலகத்தில் செய்த காமங்களின் பயன்களான புஷ்பங்களைப் பார்ப்பாய்; அதின் ஒவ்வொரு புஷ்பத்தினிடமும் ஓர் ஓர் ஸர்ப்பம் சுற்றி முண்டலமிட்டிருப்பதைக் காண்பாய், இதுவே புவர்லோகம் அதில் எல்லாம் மருளும் மயக்கமுமாக இருக்கும்.

13. மூன்றும் பூமி, இது ஞாநபூமி. அதற்கு அப்பால் பூர்ணஞாந ஊற்றுக் கண்ணுள்ளது அதுவே ஞாந நிலையமாம். எல்லையற்றதும் நித்தியமானதுமான அக்ஷரம் என்ற அந்த பூமிவிஸ்தரித்து இருக்கிறது.

14. முதல் பூமியை ஸாவதானமாய்த் தாண்ட விரும்புவாயாகில், உலகவாழ்வின் காமாக்கினியைக் கண்டு ஞாநசூரியனின் ஒளி என மயங்கி மோசம் போகாதே. இரண்டாம் பூமியை ஸாவதானமாய்த் தாண்ட விரும்பினால், அதில் தோன்றிடும் பகட்டான புஷ்பங்களின் சுகந்த வாசனைகளை முகர எண்ணாதே: அவைகளைப்பார்த்துத் தங்காதே: அவைகளின் வசமாகாமல் நீ தப்பினால், கர்மபந்தங்களி

னின்று நீ விடுபடுவாய். அந்த மாயாபூமியில் உன் குருவை நாடாதே: அறிஞர்கள், இந்திரியங்களின் விஷய நுகர்ச்சி நிகழுமிடங்களில், தங்கார்; தாமதிக்கார். மாயையின் மயக்கமான இனிய வசனங்களுக்குச் செவிகொடார்:

15. உனக்கு இரண்டாம் பிறப்பைக் கொடுப்பவரும், ஞானதீக்ஷை கொடுப்பவருமான குருவை மூன்றும் ஸ்தானமாகிய ஞானபூமியில் தேடு. அந்த பூமியிலோ மயக்கங்கள் இல்லை. நிழல்கள் கிடையா. எப்போதும் குறைவில்லா மஹிமையுடனே சத்தியம் என்ற ஞானசூரியன் பிரகாசிக்கிறான்:

16. அஜம் (பிறக்காத) என்று சொல்லப்பெறும் ஒரு வஸ்து உன்னிடமும் அந்த 3-ம் ஸ்தானத்திலும் உள்ளது. அஃதை அடையவும், அதாவது, இரண்டும் ஒன்றுபடச்செய்யவும் விரும்புவாயாகில், மயக்கத்திற்குக் காரணமாம் இருண்ட கோசங்களைக் கழற்ற வேண்டும். ஊனின் வார்த்தையைக் கேட்காதே. இந்திரியங்களின் தோற்றம், உனக்கும் அந்த ஞான ஒளிக்கும் மத்தியில், வாராமல் இருக்கட்டும்; அப்போது நீயும் அந்த ஒளியும் ஒன்றுபடுவாய். உன் அஞ்ஞானத்

தை அறிந்து இரண்டாம் பூமியைவிட்டுத் தப்பி ஓடுவாய். இந்த இரண்டாம் ஸ்தாநம் பிரமை உண்டு பண்ணுதலில் வஞ்சகமான வனப்புள்ளது என்பதை அறி.* நீ பழகவேண்டியே இஃது ஏற்பட்டது. அதன் பிரமையை உண்டுபண்ணும் தேஜஸால் மயங்கி உன் மநம் அதில் அகப்பட்டுத் திகைப்புக் கொள்ளாமல் எச்சரிக்கையாக இரு.

17. இத் தேஜஸ் என்பது அவித்தையின் மோசமான காரியம். இந்திரியங்களை மயக்கும். மநத்தைக் குருடாக்கும். ஜாக்கிரதையற்றவனை நாசப்படுத்தும்.

18. இராத்திரி ஜ்வலிக்கும் தீபத்தைக் கண்டு மயங்கி விளக்கெண்ணெயில் விழுந்து மாண்டுபோகும் அந்துப்பூச்சியைப்போல,ஜாக்கிரதையற்றவன் மயக்கமான தேஜஸ்என்று அறியாமல், இப்படியே மாண்டு போவான். அவித்தையின் அடிமையாகி இவ்வுலகத்திற்கு மறுபடியும் திரும்புவான்.

---

* கட உபநிஷத்தின் முதல் அத்தியாயம் 20 முதல் 28 வரையுள்ள மந்திரங்களைப் பார்க்க.

19. ஜீவாத்மகோடிகளைப் பார். ஸம்ஸாரமென்ற கொந்தளிப்புள்ள கடலில், அவைகள் தத்தளிக்கின்றமையைக் கவனிப்பாய். சோர்வடைந்தும், இளைத்தும், சங்கடங்களால் வருந்தியும், மனக்கலக்கமுற்றும், சக்தியற்றும், ஒன்றின்பின் ஒன்றாய்ப் பொங்கும் அலைகளில் வீழ்ந்து மாளுகின்றன. கொடுமையான காற்றால் அங்குமிங்கும் மோதப்பட்டும், புயற்காற்றால் துரத்தப்பட்டும், சுழிகளில் போய்விழுகின்றன. காற்றால் உண்டாகும் சுழல்களில் போய் விழுந்து மாய்கின்றன.

20. மூன்றும் ஸ்தாநமாகிய ஞாநபூமியின் துவாராக, ஆநந்தபதத்தை அடைய விரும்புவாயாகில், சிஷனே! நீவேறு, நான்வேறு என்று வேற்றுமைப்படுத்தும் தன்மையதாகிய பயங்கரமான அவித்தையின் வசமாகாமல், உன்னுடைய இந்திரியங்களைப் பாதுகார். அவைகளின் வழிகளை நன்றாய் அடை.†

---

† “மாறிநின்று எனைமயக்கிடும் வஞ்சபுலனைந்தின் வழியடைத்தமுதே!” என்ற மாணிக்கவாசகரது வசநம் இங்கு கவனிக்கத் தக்கது.

21. தேவலோக ஜநிதமானதும், மர்யாசமுத்திரத்தில் மூழ்கியிருக்கிறதுமான உன் ஆத்மா பிதாவாகிய பரமாத்மாவினுடைய சம்பந்தத்தை விட்டு விலகாதிருக்கட்டும். தகிக்கின்ற (குண்டலினீ) சக்தியானது பிரஹ்மபுரமாகிய உன் ஹிருதயகுகையில் போய் அடங்கட்டும். அதுவே லோகமாதாவின் இருப்பிடம்.

22. பின்பு ஹிருதயத்தினின்று, 6-ம் ஸ்தானமாகிய கண்களுக்கு மத்தியிலுள்ள புருவமத்தியஸ்தானத்திற்கு அந்த குண்டலினீ சக்தியானது ஏறட்டும். அப்போது அஃது எங்கும் பரவியுள்ளவர்க்கான உன் குருநாதனின் நாதமாகவுமிருக்கின்ற ஏகாத்மாவின் சுவாஸமாக ஆகிவிடும்.

23. அப்போதுதான் ஆகாசத்தில் நடக்கிறவகை ஆதல் கூடும். ஜலங்களைத் தொடாமல், அலைகளின்மேல் வாயுமண்டலத்தில் நடைமாடலாம்.*

---

* குறிப்பு:—யோகியின் உடல் காற்றால் அமைந்தது போலவும், அங்கங்கள் முளைத்திருக்கிற மேகம் போலவும், அரும் சமுத்திரத்திற்கப்பாலும், நக்ஷத்திரங்களுக்கப்பாலும், உள்ளவைகளைப் பார்ப்பான். தூரதிருஷ்டி ஏற்படும். தேவர்களின் பாஷையைக் கேட்பான்; எறும்பின் மனத்தில் உள்ள எண்ணங்களையும் அறிவான்,— ஞானேசுவரி.

24. குப்தமான திவ்விய நாதங்களான ஏணியின் மேற்படியில் நீ அடிவைக்குமுன், உன்னுள்ளத்திலிருக்கின்ற நாதனின் வாக்கை எழுவிதமாக நீ கேட்கும் இயல்பினனாகவேண்டும்:—

முதலாவது தொனி—இரவிற்பாடும் குருவி தன் இணையை விட்டுப் பிரியும் சமயத்தில், பாடும் இனிமையான கானம் போன்றதாம்.

இரண்டாவது—மினுமினுக்கின்ற நக்ஷத்திரங்களை விழிப்பிக்கும் தியானிகளின் (Dhyanis) வெள்ளிக் கைத்தாளத்தின் நாதத்தை ஒத்ததாம்.

மூன்றவது—கவசத்துக்குள் அடைக்கப்பட்டிருக்கின்ற (அலையில்லாத) சமுத்திர ராஜனின், இனிமையான புலம்பல் போன்றதாம்.

நான்காவது—வீணையின் தொனி போன்றதாம்.

ஐந்தாவது—புல்லான் குழலின் கிறீச்சு என்ற சப்தம் போன்றதாம்.

ஆறாவது—எக்காளம் அல்லது பூரிகையின் சப்தம் போன்றதாம்.

ஏழாவது—மழை மேகத்தின் மந்தமான இடி முழக்கம் போன்றதாம்.*

இந்த ஏழாவது மற்ற நாதங்களை விழுங்கும் தன்மையது. மற்றவைகள் ஒய்கின்றன. அவைகள் இனிக் கேட்கப்படாவாம்.

25. மனிதனின் கீழான ஆறு தத்துவங்களும் அறுபடுமாயின், அதாவது அவைகள் அடங்கப்பெறின், அவை குருநாதன் பாதங்களில் அர்ப்பணமாக வைக்கப்படுமாகில், பின்பு சீஷன் ஆத்மாவுடன் ஏகீபாவத்தை அடைகிறான், பிரஹ்மமாகிறான் அந்நிலையில் தங்குகிறான்.

---

* குறிப்பு:—நாத பிந்து உபநிஷத்தின் முதலாம் அத்தியாயத்தில் பதினொரு நாதங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவையாவன:—1 சமுத்திர அலை, 2 மேகங்களின் முழக்கம், 3 பேரிகை, 4 மலையருவி, 5 மிருதங்கம், 6 கண்டாமணி, 7 நாகசுரம், 8 கிங்கிணி, (சலங்கை ஓசை) 9 புல்லாங்குழல், 10 வீணை, 11 பிரமரத்தின் (வண்டின்) ரீங்காரம் இவைகளில் 1 முதல் 4 வரை, முதல்படியிலும் 5 முதல் 7 வரை இரண்டாம்படியிலும், 8 முதல் 11 வரை மூன்றாம் படியிலும், இவைகளுக்கும் அப்பால் மஹாசூக்ஷ்மமான நாதங்களும் கேட்கப்படும்.

26. இந்நெறியில் பிரவேசிக்கும் முன், காம சங்கற்பங்களினின்று உன் அசுத்த மநத்தைச் சுத்தம் செய்யவேண்டும்; உன் மனோமயகோசம் தூய்மையாகவேண்டும். உன் ஹிருதயம் பரிசுத்தம் பெறவேண்டும்.

27. நித்தியமான பிராணனின் ஸ்படிகம் போன்ற தெளிவான சுத்த ஜலங்கள், புசல் காற்றால் அலைகொண்ட வண்டலும் சேறுமுள்ள அசுத்த ஜலப்பிரவாகங்களுடன், ஒன்றுபடா.

28. உதய சூரிய ரஸ்மியில் ஜ்வலிக்கின்ற ஆகாசத்தினின்று தாமரைப் புஷ்பத்தின் மத்தியில் படிந்த பனித்துளி பூமியில் நழுவிவிழ, களிமண்ணாகி ஆகின்றது! முன் முத்துப்போன்றது இப்போது மண்மாசாகத் தோன்றுவதைப் பார்!

29. உன் அசுத்த சிந்தனைகள் உன்னை மேற்கொண்டு, உன்னை வசப்படுத்து முன், அவைகளுடன் போராடி அவைகளை ஜயிப்பாய். அவைகள் உன்னை, அடிமையாகச் செய்யக்கூடியது போல், அவைகளை உனக்குச் சேவகர்களாகச் செய்துகொள்வாய். அவை

களை நழுவலாய் விட்டாயாகில், அவைகள்வேருன்றி வளரும். கடைமுறையில் உன்னை மயக்கி வசப்படுத்தும். உன்னைக் கொல்லும். அவைகளைப்பற்றி ஜாக்கிரதையாக இருப்பாய். அவைகளினுடைய நிழலாய் இருந்தாலும் அதற்குக் கொஞ்சமேனும் இடங்கொடாதே. ஏனெனில் நிழல்போன்றதே, பின் வளரும்; உருவத்திலும் சக்தியிலும் விருத்தியடையும். இந்த இருள்போன்ற நிழலே, அதாவது இந்த அருவருப்பான வஞ்சனையான கறுத்த ஸ்வரூபம் இன்னது என்று நீ உணர்ந்து அறியு முன்னமே, உன் முழு உயிரையும் உறிஞ்சிவிடும்.

30. முன் பிரஸ்தாபித்த அந்த குப்தமான குண்டலினீசக்தியின் உதவியால், நீ தேவசுபாவம் பெறு முன், உன் அசுத்த மாநவிக சரீரத்தை இஷ்டப்படி கொல்லும் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

31. அநாத்மாவும் ஆத்மாவும் இரண்டும் சந்திக்கமாட்டா. இரண்டில் ஒன்று தொலையவேண்டும். இரண்டும் தங்க ஓரிடமுமில்லை.

32. உன்மநம் மெய்யுணர்வுபெறுமுன், அகந்தை என்ற பூண்டு வேரோடு அறவேண்டும். திரும்பாதபடி வேற்றுமைப்படுத்தும் பிராமை என்ற புழுவை நசித்தல் வேண்டும்.

33. அதில் நடக்குமுன், அந்நெறியாக நீ ஆதல் வேண்டும்.

34. தாமரைப் புஷ்பமானது உதயசூரியனின் ரஸ்மியைப் பாநம் பண்ணுமாறு மலர்ந்து தன் உள்ளத்தைத் திறந்து வெளிக்காட்டுவதுபோல, ஒவ்வொரு துக்க அழுகையையும் உன் மநம் கேட்பதாகட்டும்.

35. துக்கம் கொண்டவனின் கண்ணீரை நீ துடைப்பாய். சூரிய வெப்பத்தால் அது உலராமலிருக்கட்டும்.

36. தபிக்கின்ற ஒவ்வொருவனுடைய துக்கக்கண்ணீரும் உன் ஹிருதயத்தில் விழட்டும்; அங்கேயே தங்கட்டும், அக்கண்ணீருக்குக் காரணமாம் துக்கத்தை நீ நிவிர்த்திக்குமுன் அதைத் துடையாதே.

37. இரக்கமுடையநெஞ்சத்தினனே! இக்கண்ணீர்ப் பெருக்கால் ஏற்படும் வாய்க்கால்கள் தான் நித்தியமான அன்பு என்ற வயல்களுக்குப் பாசனவாய்க்கால்கள். அந்த அன்பு என்ற வயலின்கண் நிசிராத்திரியில் போதிசத்வா என்ற புஷ்பம் மலரும்! அன்பின் பயனுல் உலக குருவாகத் தோன்றுவர். இத்தன்மையராக அவதரித்தல் மிகவும் தூர்லபம். இது அபூர்வமான காட்சி; வோகே மரத்தின் புஷ்பத்தைக் காண்டல் எவ்வளவு அரிதோ அவ்வளவு அரிது. இத்தன்மையான நிலைமையைப் பெறுதல் இனிப்புநர்ஜந்மம் இன்மையின் வித்தாகும். அவர் அர்ஹத்தராவார். உலகப்போரினின்றும், காமத்தினின்றும், அவர் பிரத்தியேகப்படுவார். பல பிரஞ்ஞா பூமிகளின் வழியாகச்சென்று, கடையில் சாந்தமும் சுகிர்தமு முள்ள பதவியை அடைவார். அஹங்காரமற்று மௌந நெறிபற்றியவரே அதை அறிவார்.

38. ஆசையை அறுப்பாய். அதைஅறுத்தபின், அது திரும்ப உண்டாகாமலிருக்கும்படி கவனம் கொள்ளுவாய்.

39. பிராணனின் அபிமாநத்தை (உயிர்ஆசையை)க் கொல்லு. உயிரின் மேலுள்ள ஆசையைக் கொல்லுகிறது என்றால், நித்தியமான வாழ்வை அற்று இருத்தல் அன்று. அநித்திய உயிர் வாழ்வை விட்டு நித்தியமான உயிர்வாழ்வு வேண்டற்பாலது என்பதாம்.

40. ஒன்றையும்விரும்பாதே. கர்மகதியைக்கண்டு சினம் கொள்ளாதே. மாறாத பிரபஞ்ச தர்மவிதிகளைக் கண்டு கோபம்கொள்ளாதே. அநித்தியமானவைகளுடனேயும், அழியக்கூடியவைகளுடனேயும், தற்சமயம் அடைந்திருக்கிற பிரகிருதஜந்மத்துடனேயும், க்ஷணிகமிருக்கும் இயல்பினதானவைகளுடனேயும், போராட்டம் கொள்ளு.

41. பிரபஞ்ச தர்மத்துடன் இசைந்து நேர்மையாகத் தொழில் புரி. அதனால் உனக்குப் பயனுண்டு. பிரபஞ்சம் உன்னை ஒரு சிருஷ்டி கர்த்தனாக மதிக்கும், உன் வசமாகும், அதன் குப்தமான விஷயங்கள் உனக்குத் தெளிவாய்த் தோன்றவதாகும். அதன் அந்தர்கதமாயுள்ள, பாக்கியங்கள் உன் மநக்கண்ணுக்கு வெளிப்படையாகும். உன்னுடைய

திவ்விய திருஷ்டிக்கு நிதி நிக்ஷேபங்கள் தெரிய வரும். என்றும் மூடாத எப்போதும் விழிப்புள்ள அந்த திவ்வியதிருஷ்டிக்கு, பிரபஞ்சத்தின் எந்த வர்க்கங்களிலும், மறைவானவை ஒன்றும் இல்லை.

42. பின்பு அவைகளை அடைய வழியும் முறையும் உனக்குத் தெரியவரும். முதல் வாயில், இரண்டாம் வாயில், மூன்றும் வாயில், ஏழாம் வாயில் வரை வாயில்கள் உண்டு. அதன் பிறகு, லக்ஷியமான நிலை தோன்றும். அதற்கு அப்பால், ஊனக் கண்ணால் பார்க்கக்கூடாததும், ஞானக்கண்ணால் மாத்திரம் பார்க்கக் கூடியதும், வாயால் சொல்ல வொண்ணாததுமான, ஆத்ம சூரியப்பிரகாசத்தில் தோய்ந்த மஹிமைகள் இருக்கின்றன.

43. இந்த லக்ஷியமான நிலைக்கு ஒரே வழிதான். அவ்வழியின் முடிவில் மௌநம் கடந்த நாதம் கேட்கும். இம்முறையின் அப்பியாசி ஏறும் ஏணியானது துன்பம் துயரம் என்ற படிகளால் அமைக்கப் பெற்றிருக்கிறது. புண்ணியம் என்ற வாக்கினால் தான் இத்துன்பம் துயரம் என்ற படிகளை அடி வைத்து ஏறலாம்; ஒரு அற்பமான தீய விஷயங்கூட

உன்னிடம் இருத்தல் கூடாது. அதை முற்றும் விட்டுப் படியேற வேண்டும். அது இருந்தால், நீ கெடுவாய். ஏணி முறிந்து விழும். நீ கீழே விழுந்து மடிவாய். அந்த ஏணி, தீயவையான உன் பாபங்களின் சேற்றில் நாட்டப்பெற்றிருக்கிறது, பிரகிருதி என்ற விஸ்தாரமான பாழைத் தாண்ட எத்தனிக்குமுன், தியாகம் என்ற ஜலத்தால், உன் பாதங்களைக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். இந்த ஏணியின் அடிப்படியிற்கூட, அசுத்தமான பாதங்களை வைக்காமலிருக்கும்படி எச்சரிக்கையாக இரு. தவறினால் துன்பத்திற்கு உள்ளாவாய். பாதங்களில் இருக்கின்ற அசுத்தமான பாபகிரஸ்தமான சேறு உலரும், பிசுக்குப் பிசுக்கென்று ஒட்டிக்கொள்ளும், மேலே ஏற ஒட்டாமல் இருந்த விடத்திலேயே தங்கும்படி வச்சிரப் பசைபோலப் பிடித்திழுக்கும். பக்ஷியைப் பிடிக்கும் வஞ்சகனான வேடனுடைய வலையின்கண்ணுள்ள ஒட்டுப் பிசினில் அகப்பட்டுக்கொண்ட பக்ஷிபோல, மேலேற முடியாமல் சீஷனானவன் தடைப்பட்டுத் தத்தளிப்பான். அவன் செய்த பாபங்கள் ஸ்வரூபப்பட்டு, அவனைக் கீழ்நோக்காக இழுக்கும். சூரியன் மலைவாயில்

விழுந்தமேல், நரி சிறித்து ஊளை இடுகிறதுபோல, அவன் பாபங்கள் ஆரவாரிக்கும், கூச்சலிடும். அவன் எண்ணங்கள் பெரிய ஸைந்நியமாகப் பெருகும். அவனை அடிமைப்படுத்திக் கொண்டுபோம்.

44. அந்த பயங்கரமான மார்க்கத்தில் முதல்அடி வைக்குமுன், சீஷனே! உன் ஆசைகளை அறுப்பாய்: உன் தீய செயல்களின் வலிமை குறையட்டும்.

45. அந்த ஞாந ஏணியின்மேல் கால்வைக்கு முன், இனி உண்டாகாமல் உன் பாபங்களைத் திக்கு முக்காடச்செய். அவைகள் என்றும் ஊமையாக இருக்கும்படி செய்.

46. உன் மநத்தின்கண் எண்ணங்கள் எழாமல் அடக்குவாய்: உன் ஊனக்கண்ணுக்கு இன்னும் தோன்றாதவரும், ஆனால், இருக்கிறார் என்று உன் மநத்தினால் உணரப்படுபவருமான உன் குருநாதன் மேல் ஒருநிலைப்பட்ட சிந்தையை வைப்பாய்.

47. உன் உட்பகைவர்கள் (காமக்குரோத லோப மோகங்கள் முதலியவை) உன்னைத் தாக்காமலிருப்

பதற்காக, எல்லா இந்திரியங்களையும் ஒன்றில் லயப் படுத்துவாய்: உன் மூளையின் குகையின்கண் மறைந்து ஒடுங்கியிருக்கின்ற அந்த இந்திரியத்தின் மூலமாய்த்தான், உன் குருநாதனை நோக்கிச் செல்லும் செங்குத்தான மார்க்கம் மங்கலாய் உன் மநக்கண்ணுக்கு வெளியாகும்.

48. சிஷனே! உன் முன்னுள்ள மார்க்கம் நீண்டது, அலுப்புக்கொள்ளக்கூடியது. சென்றுபோன விஷயத்தைப்பற்றி யாதேனும் ஒரு சிந்தனை கொண்டால் அது உன்னைக் கீழ்நோக்கித் தள்ளும்: திரும்பவும், நீ ஏணியேற ஆரம்பிக்கவேண்டுவதாகும்.

49. சென்ற அநுபவங்களைப்பற்றிய ஸ்மரணையைத்தவிர், பின் நோக்காதே. நோக்கில் மோசம் போவாய். இழந்தாய்.

50. காமனைகளுக்கு உணவு கொடுத்துத் திருப்தி செய்து அவைகளை அறுக்க முடியும் என வீணாக நம்பாதே. இந்த விபரீத எண்ணம் வஞ்சனையானது. இதைத்தவிர். தீய கர்மத்திற்கு உணவு கொடுத்தால், அது விருத்தியாகும், விரியும், பலப்

படும். அது புஷ்பத்தில் விழும் புழு. அதன்கண்ணுள்ள சத்தை உறிஞ்சி, அதைப் பாழாக்குதல் போலாம்.

51. புல்லூரிப் பூச்சி ரோஜாச்செடியின் ஹிருதயத்தைக் குடைந்து அதன் ஜீவரஸத்தைப் பாநம் பண்ணுமுன், அச்செடியின் கிளையில் வெடித்து மலர்ந்த ரோஜாப் புஷ்பம் திரும்பவும் மொட்டாக வேண்டும்.

52. புயல் காற்றால் அடிமரம் உலர்ந்து போகுமுன், பொன் போன்ற மரம் தன் அழகான மணி போன்ற மொட்டுக்களை வெளிப்படுத்துகின்றது.

53. சிஷ்யன் காதில் முதல் நாதம் விழுமுன் தான் முன் அனுபவித்த, அதாவது சென்றுபோன குழந்தைப்பருவத்தை அவன் திரும்பப் பெறவேண்டும்.

54. ஏகனுன அந்தக் குருநாதனிடமிருந்து, பிரகாசம், அதாவது வாடாமல் ஒரே மாதிரியாயுள்ள சுவர்ணம் போன்ற ஆத்ம தேஜஸின் ஜ்வலிக்கின்ற ரஸ்மிகள், சிஷ்யன் மேல் முதன் முதற்கொண்டே விழு

கின்றன. இருண்ட, அடர்ந்த, கெட்டியான பிர கிருதியின் மேகம்போன்ற திரவியத்திரள்களை ஊடு உறுவி, நூலிழை போல, அந்த ரஸ்மிகள் பிரவேசிக் கின்றன. அடர்ந்த காட்டில் இலைகளின் இடுவெல் கள் மூலமாய் இங்கும் அங்குமாய் சூரியப் பிரகாசம் பூமியின்மேல் விழுமாறுபோல, இந்த ஆத்ம தேஜ ஸின் கிரணங்கள் இங்குமங்குமாகப் பிரகாசிக்கின் றன. ஆனால் சிஷனே! ஊன் அடங்கியும், மூளை குளிர்ந்தும், ஜ்வலிக்கின்ற வஜ்ஜிரமணிபோல மநம் ஒருநிலைப்பட்டும், நிர்மலமாகியும் இராவிடில், அந்த ஆத்ம தேஜஸின் கிரணம் ஹிருதய குகையை எட் டாது. மந இளக்கம் உண்டாகாது. உயர்நல முள்ள குப்தமான நாதங்கள்* கேட்கப்படா. ஆரம் பத்தில் சிஷன் எவ்வளவு ஆத்தரப்பட்டாலும் பிர யோஜனமின்ரும்.

55. அந்நாதங்களைக் கேட்குமுன், நீ (அந்தஆத்ம தேஜஸை)ப் பார்க்க இயலாது. அந்த ஆத்ம தேஜ

---

* குறிப்பு:—குப்தமான நாதங்களும் கானங்களும் தியான ஆரம்பத்தில், யோகியால் கேட்கப்படும். அவை அநாஹத சப்தம் எனப் பெயர் பெறும். யோக முறையில் அநாஹதம் 4-ம் சக்கரமாம்.

ளைப் பார்க்குமுன், நீ அந்நாதங்களைக் கேட்க இயலாது. அப்படிக் கேட்டலும் பார்த்தலும் இரண்டாவது படி.

56. சீஷன் அந்தர்முகப்பட, ஊனக்கண்கள், காது, மற்றப் புலன்கள் மூடபெற்றாலும், சூக்ஷ்மப் பார்வையும் சூக்ஷ்மக் கேள்வியும், சூக்ஷ்மமாய் ருசித்தலும், சூக்ஷ்மமாய் முகர்தலுமான தகைமையைப் பெறுவான். அப்போது நான்கு இந்திரியங்களும் 5-வதான சூக்ஷ்ம ஸ்பரிச இந்திரியத்தில் லயமாகும். அப்போதுதான் துரிய நிலையைச் சீஷன் அடைகிறவனாவான்.

57. மனோநாசம் செய்ய முயலும் சீஷனே! இந்த 5-வதான சூக்ஷ்ம ஸ்பரிச இந்திரியத்தில் லயமானவைகள், திரும்பவும் உயிர்ப்பைப் பெறாமல் அற்றுப்போக வேண்டும்.*

58. வெளிவிஷயங்களை உன் மனம் நோக்காமல் இருத்தல் வேண்டும். வெளிப்பார்வை அறவேண்

* குறிப்பு:—இது ஆறாவதுபடி. இது குப்த, சாஸ்திர முறையில், தாரணை என்பதாம். ஒவ்வொரு இந்திரியமும், தன்னிலைமையில் நாசமுறவேண்டும்.

டும். அந்தர்முகப்படுகிறதில், வெளிவிஷயங்களின் விக்கிரகங்கள் அதாவது மநச் சங்கற்பங்களும் போகவேண்டும். இன்றேல், ஆத்ம தேஜஸின் அநுபவகாலத்தில், அவைகளின் இருண்ட நிழல் உன் முன் எதிர்க்கும்.

59. இப்போது ஆறும் படியான தாரணை என்ற படியில் ஏறியிருக்கிறாய்.*

60. ஏழாம்படிக்குப் போவாயாகில், ஓ! சீஷனே! சிரேஷ்டமான அந்த முப்பான்மையான ஸ்வரூபத்தைப் பார்க்கமாட்டாய். அவை எல்லாவற்றையும் ஒன்றாய்த்தான் நீ இனி அறிவாய். அம்மூன்றும் நீயாக ஆகிவிட்டாய். நீயும் உன் மநமும் இவை இணைபிரியா இரட்டையர்களாம். நீ இலக்ஷியித்து நோக்கும் சுடர் (ஆத்மதேஜஸ்) சிரசின்மேல் பிரகாசித்து எரியும். இது ஆத்ம புத்தி மனஸ் என்ற முப்பான்மையான ஜீவாத்மா. இவை அழிவில்லாத மகிமையுள்ள ஆநந்தஸ்தானத்தில் வஸிக்கின்றன. மாயாப் பிரபஞ்சத்தில் இவைகளின் பெயர்கள் இந்நிலையில்

---

* யமம் 1, நியமம் 2, ஆஸநம் 3, பிராணாயாமம் 4, பிரத்தியாஹாரம் 5, தாரணை 6, தியாநம் 7, சமாதி 8.

அழிந்துபோகின்றன. முன்னிருந்த முச்சுடரானது இப்போது ஒரே சுடராக ஆகிவிட்டது. அச்சுடர் ஒன்றுகப் பிரகாசிக்கின்றது; சுடுகிறதில்லை. உயிருடன் ஞானியானவன் உலகில் இருக்கும்வரை ஆத்மாவின் உபாதி இதுவாம்.

61. இந்நிலையைஜ் ஜயம்கொண்டு பெற்றயோகியே! இதைத் தியாநநிலை என்பார். இது சமாதிக்கு முற்பட்டது. பூர்ணமஹாத்மாவாக ஆகுமுன், இது தான் கடையான நிலை அல்லது படி. இந்நிலையில் யோகியானவன் நான் என்ற பிரஞ்ஞையுடன் இருப்பான்; மேலான தத்துவங்களின் தொழிலை உணருவான். இன்னும் ஒருபடி ஏற, அவன் ஏழாம்படிக்கு அப்பால் (சிலர் முறைப்படி துரியத்திற்கு அப்பால்) அவன் இருப்பான். தாரணை, தியானம், சமாதி, இம் மூன்றையும் சேர்த்து ஸம்யமம் என்று சொல்லுகிறதுண்டு.

62. நீ இப்போது (ஸமாதிநிலைக்குப் போகும் போது) பரமாத்மாவின்கண் உன்னை இழந்தாய், அதாவது அத்துடன் இரண்டறக் கலந்தாய், நான்

என்ற எண்ணத்தைத் துறந்தாய், எதினின்று முன் தோன்றினையோ அதில் லயமானாய்.*

63. சிஷ்யனே! "நான்" என்பது எங்கே? "குரு" எங்கே? "சிஷ்யன் தான்" எங்கே? பொறிநெருப்பில் விழுந்து ஒன்றுபட்டுத் தன் தனி நிலையை இழந்தது! ஜலத்துளி சமுத்திரத்தில் லயமானது! நித்தியமான ரஸ்மி (ஜீவாத்மா) பரமாத்மாவாக ஆகிவிட்டது! பரஞ்ஜோதியாக இருக்கிறது!

64. சிஷ்யனே! இப்போது கர்த்தாவும் நீ, சாக்ஷியும் நீ, பிரகாசிக்கிறவனும் நீ, பிரகாசமும் நீ, நாதத்தில் ஜோதிஸ் நீ, ஜோதியில் நாதம் நீ.

65. புண்ணியனே! ஐந்து தடைகளை நீ அறிவாய், அவைகளை வென்றாய். ஆறாவதின் யஜமானனாக

---

* நான் என்றும் தான் என்றும் நாடினேன் நாடலும், நான் என்றும் தான் என்றும் இரண்டில்லை என்பது, நான் என்ற ஞான முதல்வனே நல்கினன், நான் என்று நானும் நினைப்பொழிந்தேனே.—திருமந்திரம்.

இருக்கிறாய். சத்தியத்தின் நாலு படிகளை அறிவாய். அவைகளைப் பிறருக்கு உபதேசம் செய்கிறாய்.*

அவைகளின்மேல் விழும் ஒளி உன்னிடமிருந்து வருகின்றதுதான். முன் சீஷனாக இருந்தாய். இப்போது குருவாகிவிட்டாய்.

66. சன்மார்க்கத்தின் நாலு முறைகளாவன:—முதல்படி:—எல்லா துக்கங்களின் அநுபவம் நீ பெற்றாயா?

இரண்டாம்படி:—சோதனைகள் ஒன்றுசேர்ந்து உன்னை வருத்த, நீ அவைகளை ஜயித்தாயா?

மூன்றாம்படி:—பாபம் என்ற சிந்தையையும் முற்றும் அற்றாயா?

நான்காம்படி:—டேள என்று சொல்லப்பெறும் ஞாநத்துக்குக் கொண்டுபோகும் மார்க்கத்தில் அதாவது நன்னெறியில் நீ புகுந்தாயா?

---

* குறிப்பு:—5 தடைகளாவன:—1 துக்கம் இன்னதென அறிதல், 2. மனிதனின் மந நொய்மையை அறிதல், 3. ஹிம்சையான பந்தங்கள், 4. காமனைகளின் வசமாகாமல் விலகுதல், 5. ஆசைகளின் வசமாகாமல் பெயர்தல்.

நாலுபடிகள்:—1. துக்கம், 2. சோதனைகள் உண்டாதல், 3. அவைகளின் நாசம், 4. நன்னெறி,

67. இப்போது போதி விருக்ஷத்தின்கீழ் உட்காருவாய். அது பூர்ணஞானத்தின் பிரதீகம். சமாதி நிலையைப் பெற்றாய். அது மாசற்றகாட்சியின் நிலை.

68. இதோபார்! நீ ஜோதிஸாகிவிட்டாய்! நாதமாகிவிட்டாய்! ஸ்வராஜ்ஜியம் பெற்றாய். ஈசுவரனானாய். உன்னையே தேடுகிறாய். நித்தியமாய், விகாரமற்றதாய், பாபரகிதமாய், எங்கும் எப்போதும் வியாபகமாய் உள்ள நாதம் நீயே! எழு நாதங்களும் நீயே! ஒன்றான ஏகநாதமும் நீயே!*

மௌநவாக்கு, அதாவது மௌநம் கடந்த நாதம் முற்றும்.

ஓம் தத் ஸத்.

---

* குறிப்பு:—நான் என்றும் தான் என்றும் நாடி நான்சாரவே
தான் என்று நான் என்று இரண்டிலாத்தற்பதம்
தானென்று நான் என்ற தத்துவம் நல்கலால்
தான் என்றும் நான் என்றும் சாற்றுகிலேனே—திருமந்திரம்.

## இரண்டாம் பிரகரணம்.

# இரண்டு மார்க்கங்கள்.

---

1. ஓ! கருணையுள்ள உபாத்தியாயரே! மற்ற மனிதர்களுக்கு மார்க்கத்தைக் காட்டும். அம்மார்க்கத்தினுழைய அதோபாரும்! கதவைத் தட்டுகின்றார்கள்! அதன்கண் பிரவேசிக்க அவித்தையால் மருண்டு, தெரியாமல் காத்திருக்கின்றார்கள்! அந்த சுகிர்தமான தர்மமுறையான கதவு திறக்கப்படுமென்று எதிர்பார்த்திருக்கின்றதைப் பாரும்.

2. சீஷர்களின் வினா:— இஷ்டப்படிக் கருணையை அளிக்கும் சுதந்தரமுடைய புண்ணியனே! அந்த ஹிருதய* மார்க்கத்தை வெளியிடமாட்டீரா? நிர்வாணம்பெறுதலுக்குரிய வழியில் உம்முடைய அடிமைகளைச் சேர்க்கமாட்டீரா?

---

* பௌத்தமதத்தில், ஹிருதயமார்க்கம் என்றும், அக்ஷி (கண்) மார்க்கம் என்றும் இரண்டு மார்க்கங்கள் உண்டு. முன்னது சாக்ஷாத் கௌதமபுத்தர் நேரே உபதேசித்துள்ளது. பின்னது, அவர் கோஷ்டியைச்சார்ந்த அறிஞர்களின் விஞ்ஞானப்பயிற்சியின் காரியமாக ஏற்பட்டுள்ளது. இவைகளை ஆரியமதத்தில், யோகிகள், முறைப்படியே குஹைமார்க்கம் என்றும் கைலாசமார்க்கம் என்றும் சொல்லுவார்கள்.

## உபாத்தியாயரின் உரை:—

3. மார்க்கங்கள் இரண்டு; உயர் நலமுள்ள பூர்ணங்கள் மூன்று. ஸ்தூலசரீரத்தை ஞானவிருக்ஷமாக* மாற்றும் தகைமையுள்ள குணசம்பத்துக்கள் ஆறு. அவைகளை அணுகும் திறமையுள்ளவர் யார்? முதலில் அவைகளில் பிரவேசிப்பவர் யார்? இவ்விரண்டு மார்க்கங்களையும் ஒருமைப்படுத்தி முதலில் கேட்கக்கூடியவர் யார்? இவை இரண்டையும் அடக்கிக்கொண்டிருக்கும் குப்தமான தத்துவத்தை யார் தெரிவார்? இம்முறையில் விஞ்ஞானப் பயிற்சியைத் தவிர்த்து, மெஞ்ஞானத்தைக் கைக்கொள்வாய்; துக்கத்தின் விரிவைப் பார்ப்பாய்.

4. அந்தோ! என்ன சொல்லுவேன். எல்லாரும் ஆலயா என்னப்படும் பரமாத்மாவுடன் கூடியிருப்பினும், பரமாத்துமாவுடன் ஒன்றாக இருப்பினும், அந்தோ! ஆலயாவின் பிரயோஜநத்தை உணர்கின்றார் இல்லையே!

---

* மஹாத்மாவாக.

5. அலையில்லா நீர்ப்பரப்பில், சந்திரபிம்பம் பிரகாசிக்கின்றமைபோல, பார்! ஆலயா, சிறிதிலும், பெரிதிலும், நுண்ணிய அணுவிலும், மஹத்திலும்,பிரதிபிம்பிக்கின்றதைக்காண்!அந்தோ!ஜனங்களின் ஹிருதயத்தை அது கிட்டவில்லையே!இந்த அருள்பிரஸாதம் கிடைத்தும், உண்மையை அறிந்தும், வஸ்துக்களின் நிலைமையை அறியும் விலைமதிக்கமுடியாத சக்தியைப் பெற்றும், இப்பிரபஞ்சவாழ்வு நரகமென உணர்ந்தும், அந்தோ! மிகவும் சொற்பம் பெயர்கள் அதன் பலத்தைப் பெறுவார்கள்!

6. சிஷ்யன் சொல்லுவது:— ஓ! குருவே! அந்த ஞானத்தை அடைய நான் செய்யவேண்டுவது யாது? ஞானமூர்த்தியே! பூர்ணம் பெற நான் செய்யவேண்டுவது என்ன?

7. குரு சொல்லுகின்றார்:—சிஷ்யனே! மார்க்கங்களை விசாரி. அவைகளில் பிரவேசிக்குமுன், மாசற்ற நெஞ்சையுடையவனாக இரு. அதின்கண் முதல் அடிவைக்குமுன், நித்தியம் இன்னது அநித்தியம் இன்னது என்பதை அறி; அழியக்கூடியது இன்னது, அழியாதது இன்னது, என்பதை விசா

ரணையால் தெரிந்துகொள். முக்கியமாக, விஞ்ஞா நப் பயிற்சியினால் உண்டாகும் ஞாநம் இது, புத்தி யோகத்தினால் உண்டாகும் ஞாநம் இது, அதாவது, அக்ஷிமார்க்கம் இது, ஹிருதயமார்க்கம் இது, எனப் பகுத்து அறிந்து தெளிவுகொள்.

8. தவிரவும், அவித்தை என்பது காற்றில் லாத மூடின குடம்போன்றது. ஜீவனே, அதில் அடைபட்ட பக்ஷி. அதின்கண் அது கானம்பண்ண இயலாது; அதன் இறக்கையை அசைக்கமுடியாது; மௌநமாய், ஊமையாய், சோர்வுடையதாய் அது இருக்கும்; பின்பு இளைத்து மரணமாகும்.

9. புத்தியோகத்தினால் உண்டாகும் ஞாநம் இன்றேல், வெறுமையான விஞ்ஞாநப்பயிற்சியின் ஞாநத்தைவிட, அவித்தை வசமாக இருத்தலே நலம்.

10. ஞாந விதைகள், காற்றில்லாத இடத் தில் முளையாவாம். உயிர்வாழ்தலுக்கும், அநுபவம் பெறுதலுக்கும், மநத்திற்கு அகலமும் ஆழமுமான

இடம் வேண்டும்; வச்சிர சத்வாவான, பௌத்தரின் உயர்நிலையை நாடிச்செல்லும் குணசம்பத்துக்களும் அமையவேண்டும். மாயையான இப்பூமியின்கண் அக்குணசம்பத்துக்களை நாடாதே. அம்மாயையைத் தாண்டு. நித்தியமான விகாரமற்ற சத்தியம் என்பதை நாடு. மற்றவையெல்லாம் வீண் மயக்கமான தோற்றமே.

11. மநம் கண்ணாடிபோன்றது. வஸ்துக்களைப் பிரதிபிம்பிக்கும் தான்; தூளியும் அதன்மேல் படியும். கண்ணாடியைப்போல, அதைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். புத்தியின் பயிற்சியால் உண்டாம் ஞாநத்தின் இளங்காற்றைக்கொண்டு, மருள் என்ற அந்தத் தூளியைத் துடைப்பாய். ஞாந மார்க்கத்தில் பிரவேசிக்க ஆரம்பித்தவனே! உன் மநமும் ஆத்மாவும் ஒன்றுபட முயலுவாய்.

12. அவித்தையைத் தவிர், அறிவின்மையை விலக்கு. அவ்விதமே, பிரமையை ஒழி. உலகமயக்கத்தினின்று, உன் கண்ணைப் பெயர்த்திடு. உன் ஞாநேந்திரியங்களை நம்பாதே. அவை வஞ்சக முள்ளவைகள். இந்திரியங்களுக்கு இருப்பிடமான

உன் சரீரத்தில், நித்தியமான புருஷனைத் தேடு. அந்த லக்ஷியத்தைக் கண்டு, அந்தர்முகப்படு. நீ புந்தன் ஆகிறாய். மெய்யுணர்வு பெறுகிறாய்.

13. பிறர் ஸ்துதியைத் தவிர். பக்தனே! ஸ்துதி உன்னை வஞ்சித்து மயக்கத்துக்குள்ளாக்கி விடும். நீ என்பது உன் சரீரமன்று. நீ என்பது தன்னில் தானே சரீரமின்றி நிற்பவன். புகழும், நிந்தனையும் அதைப் பற்றா: அஃதை அணுகா.

14. ஓ! சிஷனே! தற்புகழ்ச்சி என்பது உயர்ந்த கோபுரம் போன்றது. அதன்மேல் மமதையுள்ள அறிவிலன் ஏறுவான், கருவத்தால் மயக்கம்கொண்டவனாய், தனிமையாய் இருப்பான். பிறர் பார்வையில் படாமல் ஏகாங்கியாக இருப்பான்.

15. பொய்யான படிப்பை அறிஞர் தவிர்ப்பார். நலமுள்ள தர்மமுறையை அறியின், அந்தப்படிப்புச் சிதறும். அத் தர்மமுறையின் சக்கரம் எல்லாருக்கும் ஒரே மாதிரியாகச் சுழலும். ஏழை என்றும், பலிஷ்டன் என்றும் அதற்கு இல்லை. விஞ்ஞானப் பயிற்சியானமார்க்கம் சாதாரணமான பெருக்

கூட்டத்திற்கு ஏற்பட்டது. ஹிருதயமார்க்கம்,குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் ஏற்பட்டது. முன்னவன் கருவத்தினுல் "இதோ பார்! நான் அறிவேன்" என்பான். பண்பும் பணிவுமுள்ள வழியில் பயின்று உண்மையை அறிந்த சீலனுனபின்னவன் "இவ்விதம் நான் கேட்டிருக்கிறேன்" என்பான்.

16. சிஷனே! ஹ்ருதயமார்க்கத்திற்குப் பதரைத் தவிர்த்து மணியைக் கொள்ளும் பெரியசல்லடை என்று பெயருண்டு.

17. நலமுள்ள் தர்மமுறையான சக்கரத்தின் கதி விரைவானது. இராப்பகலின்றி ஓய்வில்லாமல் அச்சக்கரம் அரைத்துக்கொண்டே இருக்கும். சுவர்ணம்போன்ற மணிகளைப் பதரிலிருந்து பிறிக்கும். கர்மவிதியானது, இச்சக்கரத்தை நடத்தும். அதன் சுழற்சி, அக்கர்மவிதியின் போக்கைக் குறிப்பிடும்.

18. உண்மையான ஞாநம் அச்சக்கரத்தின் சுழற்சியினுல் உண்டாகும் மாவு. பொய்யான ஞாநம்அதன்பதராம்.மெஞ்ஞாநம் என்ற பணியாரத்தை

உண்ண விரும்பினுல், நித்தியத்துவம் என்ற ஜலத்தைவிட்டுப் பிசைந்து, அப்பணியாரத்தைச்செய்து உண்ணலாம். மாயையின் பனிஜலத்தால் பதரைப் பிசைந்தால் ஏற்படும் பணியாரம், மரணதர்மத்திற்குள்ளாகும் பக்ஷிகளுக்கு உணவாம்.

19. அர்ஹத்தர் என்ற உயர்நலம் அமைந்தநிலைமை பெறுதலுக்கு, எல்லாப் பிராணிகளின்மேலும் அன்பு பாராட்டாமல் அன்பை விலக்கவேண்டுமென்று சொன்னுல் அது பொய் என்று மதி.

20. மோக்ஷம் பெறுதலுக்கு, உன் தாயாரைப் பகைக்கவேண்டுமென்ருலும், உன் மைந்தனை அநாதரவு செய்யவேண்டுமென்ருலும், உன் பிதாவை வெறுக்கவேண்டுமென்ருலும், அவரை நிந்திக்கவேண்டுமென்ருலும், மனிதன்மேலும் ஏனைய பிராணிகளின் மேலும் இரக்கமும் ஜீவகாருண்ணியமும் வைக்கவேண்டாமென்ருலும், அவ்விதம் சொல்லுகிற நாவானது வஞ்சனையுள்ள பொய்யான நாவெனத் தெளிவாய்.

21. தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும் நாடி அலையும் வேஷதாரிகள் இவ்விதம் பிதற்றுவார்கள்.

22. கர்மத்தால் பாபம் உண்டாகும், கர்மமி ன்மையால் சுகிர்தம் உண்டாகும் எனவும், ஒருவர் உபதேசித்தால், அது தவறு என அவரிடம் சொல்லு. மனிதகர்மத்தின் நிலைவறமின்மையும், பாபம், தீயவை இவைகளைத் தவிர்த்து அதன் மூலமாய் மநம் அடிமைத்தனத்தினின்று நிவிர்த்திபெறலும் ஜீவாத்மாவைப் பற்றியவை அல்ல. ஹிருதய உபதேசம் இவ்விதம் நிகழ்கின்றது.

23. அக்ஷி உபதேசம் என்பது அநித்தியமான வெளிப்பிரபஞ்சத்தைப் பற்றியது. ஹிருதய உபதேசம்என்பது போதநிலையைப் பற்றியது. அதுவே நித்தியமானது, ஸ்திரமானது.

24. திரியும் எண்ணெய்யும் சுத்தமாக இருந்தால் விளக்குப் பிரகாசமாக எரியும். அவைகளைச் சுத்தம் செய்வதற்கு, சுத்தம்செய்கிறவன், வேண்டும். ஜ்வாலையானது சுத்தம் செய்தல் என்ற தொழிலை அறியாது. மரத்தின் கிளைகளும் போத்துக்களும் காற்றால் அசையும்; அடிமரம் அசையாது.

25. அவ்விதமே, கர்மமும் கர்மமின்மையும், உன்னிடம் அமைவுறும், உன் சரீரம் சலித்தாலும்

மநம் சாந்தமாய் இருத்தற்பாலது. மலையின்கண்ணுள்ள எரிபோல உன் மநம் அலையின்றி ஓய்ந்து சுகமான நிலையில் நிற்பதாகும்.

26. காலவட்டத்தைக் கடந்த யோகியாக ஆக வேண்டுமோயின் ஓ! லானு*சிஷ்யனே! இருண்ட கானகத்திற்சென்று, ஜனங்களின்றி, கர்வமான ஏகாந்தம் கொள்ளுதலினாலன்று என நம்பு; கந்தமூலங்களை உண்ணுவதாலன்று என நினை; மலைச்சாரலில் படிந்திருக்கும் பனிக்கட்டியினால், தாகம் தீர்த்தலினாலன்று என மதி. பக்தனே! இவைகள் முடிவான மோக்ஷம் என்ற எல்லையில் உன்னைச் சேர்ப்பிக்கும் என எண்ணாதே.

27. காயக்கிலேசம் பண்ணி எலும்பு சதைகளை வருத்தப்படுத்தினால் மௌநமான ஆத்மாவுடன் ஐக்கியம் பெறலாமென்று நினையாதே, உன் ஸ்தூல சரீரத்தின் பாபங்களை ஜயித்ததினால், நிழலை† நம்பி மோசம்போகின்றவனே! பிரபஞ்சதர்மம் ஸம்பந்தமாகவும், மனிதன் ஸம்பந்தமாகவுமுள்ள உத்தரவாதங்களைச் செய்து முடித்தேன் என்றும், முற்றும் ஜயித்தேன் என்றும், எண்ணற்க.

* லானு என்பதற்கு திபேத்தியபாஷையில் சிஷன் என்பது அர்த்தம்.
† ஸ்தூல சரீரம்.

28. பூர்ணம்பெற்ற ஞாநிகள் அவ்விதம் செய்யார். அவ்விதம் செய்தலை நிந்திப்பார். தர்மஸிம்ஹமானவரும், கருணாநிதியுமான புத்தர் மனிதனின் துக்கத்தின் உண்மையான காரணத்தை அறிந்தவராய், காடுகளில் சுயநலம் கருதும் பிரேயஸ் என்ற மார்க்கத்தைத் தவிர்த்தார். அவர் காட்டை விட்டு, நாட்டை நாடி ஜனங்களுடைய ஞாந குருவாக ஆனார். அவர் நிர்வாணம்பெற்றமேல், மலையிலும், நாட்டிலும், நகரிலும் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஞாந உபதேசமும் உபந்நியாஸமும் செய்துவந்தார்.

29. அதனால், ஜீவராசிகளுக்கு அன்புள்ள கைங்கரியங்களைச் செய். அவைகளின் பலனை அநுபவி. கருணைபற்றிய கர்மம் செய்யவேண்டியிருக்க, நீ உபேக்ஷையாக அதைச் செய்யாவிடில், அது நீ செய்யும் கொடிய மஹாபாதகமாக முடியும்.

ஞாநிகள் உபதேசமாவது:—

30. யாதொரு கர்மமும் இன்றி இருக்கவேண்டுமோ? அப்படியானால் சுதந்தரம்பெறல் இயலாது.

நிர்வாண பதம் அடையவேண்டுமானால், தன்னைத் தான் அறிதல் வேண்டும். அது (தன்னை அறிதல்) அன்புள்ள நற்காரியங்களினால் ஏற்படும்.

31. உபாஸகனே, ஜயம் அடைய அவாஇல்லாதவன் போலும், அபஜயம் அடைய பயப்படாதவன்போலும், பொறுமையாக இரு. நித்தியமானவும் தேசகாலங்கள் கடந்தவுமான மஹாதபவின்கண் ஜ்வலிக்கின்ற நக்ஷத்திரத்தின் *கண் நீ ஒரு ரஸ்மியமாக இருக்கிறாய். உன் மநத்தை அந்நக்ஷத்திரத்தின்மேல் லக்ஷியம் வை.

32. அழியாமல் என்றும் வாழ்பவன்போல் முயற்சிகொள்ளு. உன் ஸ்தூல சரீரங்கள் மறைகின்றன, அழிகின்றன. உன்னிடத்தில் பிரஞ்ஞை என்று சொல்லப்படுவது அநித்தியமன்று. அதுவே புருஷன்; அவன், முன் இருந்தான். இப்போது இருக்கிறான், இனிமேல் இருப்பான். அவன் என்றும் உள்ளவன். அவன் காலத்தை, தாண்டியவன்.

---

* ஒவ்வொரு ஜீவாத்மாவும் ஒவ்வொரு பிரஹ்மாண்டத்தின் ஈசுவரனின் ஓர் ஓர் பொறி. இது குப்தசாஸ்திரத்தின் துணிபாம். முண்டக உபநிஷத்தின் 2-ம் முண்டகம் 1-ம் காண்டம் 1-ம் மந்திரம் பார்க்க.

33. இனிமையான சாந்தமும் சமாதானமும் பெற விரும்புவாயாகில் நற்காரியங்கள் என்ற விதையை இனி நீ அறுக்கப்போகும் வயல்களில் விதைக்கவேண்டும். அவைகளின் பயனாய் ஜநநம் என்ற துக்கத்தை அநுபவிக்கவேண்டும்.

34. மற்றவர்களுக்கு இடம் கொடுக்கும்படியாக வெயிலினின்று நிழலுக்குப்போ. துக்கமும் துயரமுமுள்ள வெறும் பொட்டலை (ஸம்ஸாரத்தை) கண்ணீர்ப்பெருக்கால் பாய்ச்சு. அது வினைப்பயன்என்ற புஷ்பங்களையும், பழங்களையும் தரும். மனிதனின் வாழ்க்கை என்ற சூளையினின்றும் அதன்கண் உண்டாகும் கறுத்த புகையினின்றும்,குப்பு,குப்பு என்று ஜ்வாலைகள் எழும்பும். அஜ்ஜ்வாலைகள் சுத்தமானவை; அவை உயர் எழும்பி, கர்மகதியின் விதிமுறையின் முடிவில் சன்மார்க்கத்திற்குரிய மூன்று திவ்விய கம்பீரமான போர்வைகளை உண்டுபண்ணும். அந்த மூன்று போர்வைகளாவன:— நிர்மாணக்காயம், ஸம்போக காயம், தர்ம காயம். இவை உயர்நலம் அமைந்தவை.

35. தீக்ஷாக்கிரமமாக ஒரு போர்வையுண்டு. அது சம்ஞ்ஞாப்போர்வை எனப் பெயர்பெறும்.

அது நித்தியமான தேஜஸைத் தரும். அந்த தீக்ஷை பெற்றால்தான், பிரபஞ்சப் பற்றுக்கள் அறுபடும், பிறப்பு நீங்கும். சிஷ்யனே, ஜீவகாருண்ணியத்தையும் கூடத் துலக்கும்! தர்ம காயம் என்ற போர்வையைப் பூர்ணர்களான புத்தர்கள் அணிவாராகில் அதன் பிறகு மனிதர்களுக்கு உதவி புரியமாட்டார்கள். மனித சம்பந்தம் அவர்களுக்கு இனி இன்றும். அந்தோ! சுயநலம் தேடி இவ்விதம் ஜீவகோடிகளைப் பரிதபிக்கவிடலாமோ? தனித்தனியாக அவன் அவன் சுகிர்தத்தை நாடி, மனித சமூகத்தை நிர்கதியாக விடல் கூடுமோ?

36. சிஷ்யனே! அந்த மார்க்கம் யாரும் அநுஷ்டிக்கலாம். அது பிரஸித்தமான துரவையான மார்க்கம். அது சுயலாபமுள்ளது. ஆனல் அது பிறர் நலம் பயக்காது. காருண்ணிய மூர்த்திகளான புத்தர்களாகவேண்டுவோர் குப்தமான உயர்ந்த ஹிருதயமார்க்கத்தை நோக்கினவர்களாய் அந்த தர்மகாய நிலைமையைத் தவிர்ப்பார்.

37. இந்த ஹிருதயமார்க்கத்தில், முதல்படி பிறர்நலம் பயக்கும்படி வாழ்தலாம், மேன்மை

யான கம்பீரமான 6 நற்சீலங்களை அப்பியசித்தல் இரண்டாம்படி.

38. நிர்மாண காயம் என்ற தாழ்மையான போர்வையை அணிகிறவர், தமக்குமாத்திரம் நித்திய சுகிர்தத்தைக் கருதாமல், பொதுஜந நலத்தை நாடுபவராவர்; நிர்வாணம் என்ற ஆநந்த பதத்தை அணுகியும், அது நமக்கு வேண்டாம், உலகத்திற்குப் பாடுபடுவோம், ஜநஸமூகத்தின் நலத்தை நாடுவோம், என்று நினைந்தும், தம்மின் மெலியாரை நோக்கியும் அந்த உயர்வற உயர்நலத்தைத் தியாகம் செய்வார். தியாகமுறையில் இதுவே உயர்வற உயர் நலம் அமைந்த தியாகமாம்.

39. சிஷனே! பூர்ணம்பெற விரும்பும் புத்தர்கள் அநுஷ்டிக்கும் குப்தமான மார்க்கம் இதுவே! பிறர் நலம் அடையவே தம்மைத் தியாகம் செய்கின்றார்கள் என அறிவாய்.

40. இந்த ஹிருதயமார்க்கம் உன் தகைமைக்கு மேற்பட்டதாக இருக்குமாகில், நீயே பிறர் உதவியை நாடுவாயாகில், பிறருக்கு உதவி புரியப்

பயப்படுவாயாகில், நொய்மையான கோழை நெஞ்சை யுடையானே! உரியகாலத்தில் எச்சரிக்கை கொள் ளு. அகஷிமார்க்கமான (வெளிப்படையான) சாதா ரணமார்க்கத்திலேயே இரு. அத்துடன் திருப்தி கொள்ளு. அந்த உயர்ந்த ஹிருதயமார்க்கம் பின் ஒருகால் உனக்குக் கிடைக்குமென நம்பிக்கைகொ ள்ளு. அதை இன்று நீ அடைய முடியாமற் போனு லும், நாளைக்கு அதை அடையலாம். அதாவது இந்த ஜந்மத்தில் இல்லாவிடினும் வேறு ஒரு ஜந் மத்தில் நீ அடையக்கூடுமென்றே? எம்முயற்சி யும் வீண்போகாது. முயற்சி எவ்வளவு அற்பமாயி னும், அதற்கும் பலன் உண்டு. அம்முயற்சி, நன் னெறி பற்றியதாக இருப்பினும் தீயநெறி பற்றிய தாக இருப்பினும் சரி, கர்ம விதி மாறாது. பயன ற்ற புகையும் கூட, தடம் போடாமல் மறைகின்ற தில்லை. முன் ஒரு ஜந்மத்தில் நாவினுற் சொன்ன கொடிய சொல் அறிகிறதில்லை. திரும்பவும் வரும். அவரை போட்டால் துவரை காய்க் குமா? மிளகுக்கொடி நட்டால், ரோஜாப் புஷ்பம் புஷ்பிக்குமா? இனிய மல்லிகைச்செடி முட்செடி யாக மாறுமா?

41. நாளைக்குப் பலன் அறுப்பதற்கு இன்றே வித்து இடல் வேண்டும். மஹா யாத்திரை (ஜீவன், ஒரு மந்வந்தரத்தில் சுழலும் காலம்) யில் ஒவ்வொரு நிமிஷமும் நாம் விதைக்கும் வினைகள், அவைகளுக்குரிய பயன்களைப் பின் விளைவிக்கும். இந்தப் பிரபஞ்ச விதி எஞ்ஞான்றும் தவறாது. அவரவர் முன் ஜந்மாந்தரங்களில் உண்டுபண்ணிய நற்கர்மங்கள், தீயகர்மங்கள், நற் சங்கற்பங்கள், தீய சங்கற்பங்கள் இவைகளுக்குத் தக்கவாறு, சுகவாழ்வு துக்கவாழ்வு, இனிவரும் ஜந்மங்களில் ஏற்படுகின்றன.

42. பொறுமையுள்ள மநத்துடையானே! ஊழ்வினைப்பயனை அநுபவிப்பாய். முன் என்ன என்ன கொடுத்துவைத்தாயோ, அதைப் பெறுவாய். மநச் சந்துஷ்டியுள்ளவனாக இரு. விதியின் பயனே பயன் எனத் திருப்தி கொள்ளு. கர்மகதிஇது. முன் செய்த வினைப்பயனாய், சுகிப்பாய், துக்கிப்பாய். பிறப்பு இறப்பு என்ற ஸம்ஸார சக்கரத்தின் சுழற்சியின் கதி இதுவே.

43. இன்று ஒரு வினை செய். அது உனக்கு நாளை வேலைசெய்யும்.

44. தன்னைத் துறத்தல் என்ற மொட்டுப் பூவினின்று தான், முடிவில் மோக்ஷம் என்ற கனி பழுக்கும்.

45. மருளினால் மதிமயங்கிப் பயம்கொண்டு பிறர்க்கு உதவிபுரியாமல் இருப்பவன் கெடுவான். தன்னை ஓம்பினவன் பட்டுப்போவான். ஓடும் ஜலத்தைக்கொண்டு தன் களைப்பைத் தீர்க்க விரும்புவான் ஓடையில் இறங்கப் பயந்தால், தாபத்தால் வருத்த முறுவான் அன்றோ? தனக்கு என்ன வருமோ என நினைந்து, பயத்தால், ஒரு கர்மமும் செய்யாது இருத்தல் பாபத்திற்கு வித்தாம்.

46. சுயலாபம் கருதி வேலை செய்பவனுடைய வாழ்நாள் வீணே! விதித்த கர்மத்தைச் செய்யாதவன் வாழ்நாள் வீணே.

47. உன் வாழ்நாளது கதியின் தர்மத்தை அநுஸரித்து நட. உன் ஜாதியார், உன் சுற்றத்தார், உன் நட்பினர், உன் பகைவர் இவர்கள் சம்பந்தப்பட்ட கடமைகளையும் உத்தரவாதங்களையும்கொண்டுசெலுத்து. உன்னுடைய சுகதுக்கங்களைப் பூா

நாட்டாதே. அவைகளின்மேல் பராமுகமாக இரு. வினைப்பயனை முடிவுசெய். இனிவரும் ஜந்மத்திற்குப் பயன்படும்படி சித்திகளை அடை.

48. சூரியனாக நீ இருக்க இயலாவிடினும், ஒரு தணிந்த கிரகமாகஇருத்தற்பாலதன்றோ? மேலும், சிஷ்யனே! என்றும் பரிசுத்தமான ஹிமாசலத்தின் சிகரத்தின்மேல் மத்தியாஹ்நத்தில் சூரியனைப்போல ஜ்வலிக்கும் திறமை உனக்கு இல்லாவிடினும், உனக்குத் தகுதியான தாழ்மையானவேறொரு நெறி இல்லையா? அதை நாடு.

49. இருட்டில் நடக்கின்ற யாத்திரைக்காரருக்கு அந்தி நக்ஷத்திரம் வழிகாட்டுமாறு போல, நீயும் உன்னால் இயன்றவரை உன்னண்டை உள்ளவர்க்கு வழிகாட்டுவாய். இதோ பார்! சிவப்பு மூட்டம்பெற்ற அங்காரகன் என்ற கிரகம், நித்திரைகொள்ளும் பூமியைத் தன் கண்ணால் கடாக்ஷிக்கிறான். இதோ பார்! புதன் என்ற கிரகத்தின் அக்கினி மயமான சூக்ஷ்மக் கையானது துறவிகளைஅன்புடன் காப்பாற்றும் முறையில் எட்டுகின்றது. சூரியன் இல்லாத காலத்தில், அவர் வேலைக்காரர்

களாக இவ்விரு கிரசங்களும் இரவில் காக்கின்றன. ஆயினும், இவை இரண்டும், முன் கல்பங்களின் இரண்டு சூரியர்களாகப் பிரகாசித்தன. இனி வருங் கல்பங்களில், அவ்விதமே, திரும்பவும் பிரகாசிக்கக்கூடும். இவ்விதமாகத்தான் சர்வசக்தியின் தர்மம் நிகழ்கிறது. ஏற்றமும் தாழ்வும் உலக இயல்பு.

50. ஓ! சிஷனே! அவைபோல நீயும் ஒழுகுவாய். கஷ்டப்பட்டு கால் கடுக்க நடக்கிற பிரயாணிக்கு, அவைபோல் நீயும் பிரகாசம் கொடு. உன்னைவிட மெலியானைத் தேடிப்பார், அவன் துக்கத்தில் மூழ்கி, மருளால் மயங்கி, புத்திகெட்டு ஞானமுறை தெரியாமல் தவிப்பான். ஆறுதலும் தேறுதலும், நன்னம்பிக்கையும் உண்டாகும்படி உபதேசிக்கக்கூடிய குரு இல்லாமல் தயங்கி நிற்பான். அத்தன்மையனை நாடி அவனுக்கு உனக்குத் தெரிந்ததை உபதேசம் செய்.

51. சிஷனே! அடியில் வருமாறு அவனுக்கு உபதேசம் செய்—"செருக்கைத் தவிர்த்துச் சுயநலத்தைக் கருதாமல் அவைகள் இரண்டையும், பக்தி

க்கு அடிமைகளாக்கு. தன் உயிரிடம் அபிமாநமிருப்பினும், புத்தரின் பாதமலரில், பண்பும் பணிவும் உள்ளவனுக இரு. இப்படி நடப்பாயாகில், இந்த ஜந்மத்தில், நிர்வாணம் என்ற நெறியில் பிரவேசிக்கலாம். சுரோத்தப்த்தியாவாய். ஒரே ஜந்மத்தில் நிர்வாணபதம்பெறல் முடியாத காரியமாம். பூர்ணம் பெற்றவர்பால் எற்படும் சித்திகள் உனக்கு சமீபத்தில் இரா. வெகுதூரமாக உள்ளன. ஆயினும், முதல்படியில் கால் வைத்திருக்கிருய், ஞாந நெறியான ஒடையில் இறங்கியிருக்கின்ருய், மலைச்சாரலில் வஸிக்கும் கழுகின் சூக்ஷ்மமான கண்களை அடைந்தாய். அச்சமுள்ள மானின் சூக்ஷ்மமான சுரோத்திரேந்திரிய சக்தியும் உனக்கு எற்படும்.

52. சிஷனே! உண்மையான பக்தியானது, முன் ஜந்மாந்தரங்களில் சம்பாதித்த அறிவைத் திரும்பவும் தந்து அருளும் என்று, அவனுக்கு உபதேசம் செய். திவ்வியசக்ஷுஸும், திவ்விய சுரோத்திரேந்திரியமும் ஒரு சிறிய ஜந்மத்தில் அடையப்பாலதன்று.

53. ஞானம்பெற விரும்பினால், பணிவுள்ளவனாக இரு. ஞானியாகிவிட்டால், அதிகப் பணிவுள்ளவனாக நட.

54. எல்லா நதிகளையும், ஓடைகளையும் தன்னுள், அடங்கப்பெறும் ஸமுத்திரம்போல, நீ ஒழுகு. கம்பீரமான ஸமுத்திரத்தின் சலநமற்ற சாந்த நிலையைப் பார், எத்தனை நதிகள் வந்து சேர்ந்தாலும் அவைகளை அது உணராது.

55. உன் கீழான சுபாவத்தை மேலான தெய்வ சம்பத்தால் அடக்கு. நித்தியமான தெய்வ பலத்தால், அதை அடக்கி ஆளு.

56. ஆசையை அறுக்கிறவனே பெரியவன். ஆசையின் வாசனையை அறுக்கிறவன் அவனிலும் பெரியவன். கீழானது மேலானதைக் கெடுக்காமல் எச்சரிக்கையாக இரு.

57. முடிவில் உண்டாகும் சுதந்சரத்தைப் பெற வழி உன்னிடம் உள்ளது. அந்த வழியானது உன் ஸ்தூலசரீரத்தை வசப்படுத்தலினால் தான் ஏற்படும்.

58. நதிகளுக்கெல்லாம் தாயான நதியானது பிறரால் புகழப் பெருமல், தாழ்மையாக அதன் உற்பத்திஸ்தாநத்தில் இருக்கும். அதுபோல மூடர்கள் முன்னர், அமிர்த ஜலங்களால் நிரம்பிய ஞாநிகள், ஒன்றுமில்லாத வெறுமையான மனித சரீரங்களாகமாத்திரம் காணப்படுவர்.* புண்ணிய நதிகளின் உற்பத்தி இடம் புண்ணிய தேசமாகிய தீபேத்து தேசமாம். ஞாநிகள் எல்லாராலும் பூஜிக்கப்படுவார்.

59. அருஹுத்துக்கள், திவ்விய சக்ஷுஸ்பெற்ற ஞாநிகள், உதம்பரமரத்துப் புஷ்பம்போல, அருமையானவர்கள். நிசிராத்திரியிலும், ஒன்பது, எழு தாள்கள் உள்ள சிம்ஞா செடியானது, சுத்தமான மனிதர் கால் தடத்தால் அசுத்தமாகாத அதிதாவள்யமான பனிக்கட்டிகள் உறைந்துள்ள, மலை உச்சிக

---

*ஈவஜா நஷிஶோஂஶ-ஞுஶா
ஶா நஈஷீஃ நஈஶோஶ்ரீ தஂ।
வபஂஹாவஶஜா நஹொ
ஶஶஹ-ஞு தஶஹெஹஶ௱ஂ॥

ளில், முளைக்குங்காலத்திலும், இருட்டில் புஷ்பிக்கும் தாமரை புஷ்பிக்கும் காலத்திலும், அருஹத்துகள் பிறப்பார்கள்.

60. மோக்ஷ இச்சை முதல் முதல் உண்டாகும் ஜன்மத்திலேயே, ஒருவன் அருகன் ஆதல் முடியாது. அருகன் என்றால், பூர்ணம் பெற்ற ஞானி யாவன். ஓ! சிஷ்யனே! ஞானமுறையில் அவாவுள்ளவனே! நித்தியனான ஆன்மாவுக்கும், அநித்தியமான சரீரங்களுக்கும் நடக்கும் மும்முரமான போரில் வலியத் தலையிடுகிற தீரன், அந்தப் போரின் வழியிற் பிரவேசிக்கத் தடுக்கப்படான். பிரவேசியாமல் விடான். அவன் அப்போரில் ஜயிப்பான். அல்லது அதில் மரணமடைவான்.

61. ஜயிப்பானாகில், கிடைப்பது நிர்வாண பதம். துன்பத்திற்கும், வரம்பில்லா துக்கத்திற்கும் காரணமான மரணதர்மம் பற்றிய நிழல் என்று சொல்லப்பெறும் ஸ்தூல சரீரத்தைக் கழற்றி எறியுமுன், ஜனங்கள் அவனைப் புத்தன் என மதித்துப் போற்றுவார், புகழுவார்.

62. அப்போரில் விழுந்து மடிவானாகில், அதினாலும் அவன் காரியம் வீண்போகவில்லை. இந்

ஜந்மத்தில் ஏற்படும் போரில் அநேக பகைகளை வென்று கொன்றிருப்பான் அன்றோ? அவர்கள் இனிவரும் ஜந்மத்தில் அவனைத்திரும்ப எதிர்க்கார்.

63. நிர்வாண பதத்தை விரும்பினாலும், அல்லது, அது கிடைத்து நீ அதை வேண்டாமெனத் துறந்தாலும், கர்மபலத்திலும், கர்மமின்மையின் பலத்திலும், தீரனே! எண்ணம் வைக்காதே.

64. புத்தராக வேண்டியவர், நிர்வாண பதம் என்ற மோக்ஷபதத்தைத் துறந்து, துக்கம் நிறைந்த **நிர்மாணகாயம்** என்ற குப்தமான சரீரத்தை எடுக்கின்றார். அத்தன்மையால் பல்லூழிகாலம் துன்பம் பெற விரும்புகின்றார். சீஷனே! அத்தகையர் மும்முறை பூஜிக்கப்படுகின்றார் என அறி!

65. மார்க்கம் ஒன்றே. சீஷனே! அது முடிவில் இரண்டு உட்பிரிவுகளை உடையது. அதற்கு நான்கு நிலைமைகளும் (Stages), ஏழு வாயில்களும் (Portals), உண்டு. அந்த இரண்டு உட்பிரிவுகளில் ஒன்றின் முடிவில் உடனே ஆநந்தப் பிராப்தியாம். மற்றதின் முடிவில் தாமதத்தில் ஆநந்தப் பிராப்தி

யாம். இரண்டும் புண்ணிய ஒழுக்கமுறையின் பல னும். இவைகளில், ஒன்றைத் தெரிந்து எடுத்தல் உன் பிரியத்தைப் பொறுத்தது.

66. ஒன்றே மார்க்கம், பகிரங்கமானது, குப்தமானது என்ற இரண்டு முடிவுகளை உடையது. * முன்னது லக்ஷியமான சுகப்பிராப்தியை அரு ளும். பின்னதில், தன்னையே தியாகம் செய்தலா கும்.

67. அஸ்திரமானதை ஸ்திரமானதற்கு தியா கம் செய்திடில், நீ அடைதல் உயர்ந்த பேறும். ஜல த்துளி, அது வந்த இடம், திரும்பும். பகிரங்க மான வழி மாறாத நிலையான நிர்வாண பதத்தில் சேர்ப்பிக்கும். அது குறைவில்லா நிறைவு; "மாற் றம் மனம் கழிய" நின்ற ஆநந்த நிலை.

68. ஆகவே, முதல் வழி, மோக்ஷம் தரும். இரண்டாம் வழி தியாக நெறி, அதனால் துயா முள்ள நெறிமுறை எனப் பெயர் பெறும். இந்நெறி

* முன்னதை யாரும் அறியலாம். பின்னது தீக்ஷாக்கிரம முறையில் உபதேசிக்கப்படும்.

யில் அநகன் சொல்ல ஒண்ணுத துயரத்துக்கு ஆளாவான். அத்துயரமாவது யாதெனில்: உண்மையை அறியாமல் அவித்தையில் உழலும் ஜநங்களாகிய நடைப்பிணங்களைப் பற்றிய துயரமும், கர்மகதிக்கு உள்ளாகி துக்கம் அநுபவிப்பவர்களைப்பற்றிய துயரமுமாம். ஞாநிகள்கூட கர்மகதியினுல் உண்டாகும் துக்கத்தைத் தவிர்க்க ஒண்ணுது.

69. "எல்லாக் காரணங்களையும் தவிர்க்கும்படி உபதேசம் செய். காரணங்கள் ஏற்படின் அவைகளின் காரியமாகிய வினைப்பயனின் கதியை, பலமான சமுத்திர நீரோட்டத்தைப்போல, தடுத்தல் முடியாது, அது போம் போக்கில் விடுதலே வேண்டும்." இவ்வித ஞாந உபதேசம் புதியதன்று. முன்னரே எழுதியுள்ளது.

70. பகிரங்கமான வழியின் எல்லையை அடைந்த நிமிஷமே, போதிஸத்வா சரீரத்தை அடையும் முறையை விட்டுவிடுவாய்; மும்முறை கம்பீரமான தர்மகாய நிலையில் புகுவாய், அந்நிலையில் புகில் உலகத்தையும், ஜநசமூகத்தையும் முற்றும் மறத்தல் ஏற்படும்,

71. அந்தரங்கம் அல்லது குப்தம் என்றுசொல்லப்படும் வழியும் பாநிர்வாணம் என்ற ஆநந்த பதத்திற் சேர்ப்பிக்கும். ஆனல் எண்ணிறந்த கல்பகோடிகாலத்தின் முடிவில் இது நேரும். நிர்வாண பதவிகள் அடிக்கடி லபிக்கும்,வரும்; ஆனல் மயங்கித் தவிக்கும் மூட ஜனங்களின் மேலுள்ள அளவு கடந்த இரக்கத்தாலும், காருண்ணியத்தாலும், அப்பதவியை அடைகிற புண்ணியர் மநப்பூர்வமாய் இழப்பார், தியாகம் செய்திடுவர்.

72. "கடைமுறையில் பெறும் ஆநந்தமே உயர்வற உயர்நலம் உள்ளது" எனச் சொல்லப்படுகிறது. சம்பக்ஸம்புத்தரான பூர்ணமான நிலையை உபதேசிக்கும் குருவானவர், பரிசுத்தமான நிர்வாணபதவியின் தலைவாயிலில் நின்று அதைத் துறந்தார், உலகத்தைக் காப்பாற்றும்பொருட்டு அவ்விதம் தன்னைத் தியாகம் செய்தார்.

73. இவ்விரு வழிகளின் உண்மைகளை இப்போது அறிவாய். உயர்நிலை அடைய அவாவுள்ளானே! சன்மார்க்கத்தின் முடிவை அடைந்த

மேலும், ஏழு வாயில்களைத்தாண்டியமேலும், இவ்வி ருவழிகளில் ஒன்றை நீயும்தெரிந்தெடுக்கவேண்டிய வனாவாய். உன் மனம் தெளிந்திருக்கிறது. எல் லாவற்றையும் நீ அறிந்துள்ளாய்; இனிமேல் வீணான எண்ணங்களால் மதிமயங்கி மோசம்போகமாட்டாய். சத்தியமானது உன்முன்னர் யாதொரு மறைப் பின்றி வெளிப்படையாகத் தோன்றுகிறது. உன் னைத்தீர்க்கமாய் உற்றுப்பார்க்கின்றது. அது உபதே சிக்கிறதாவது:—

"ஸ்வாத்மலாபத்தை நோக்கில், சாந்தநிலை, மோக்ஷம், இவைகளின் பலன் இனிமையானது தான். ஆனால், நெடுங்காலம், வர்த்தமுற்றுச்செய் யும் கடமையை நிறைவேற்றுதலினால் உண்டாகும் பலன் அதனினும் இனிமையானது. ஆம் பிறர் பொருட்டுச் செய்யும் தியாகத்தினால் உண்டாகும் பலனன்றோ இது! துக்கத்தால் வருந்தும் நம்மவர் களான மனிதரின் நலத்தைக் கருதியன்றோ இந்தத் தியாகமுறை நிகழ்கின்றது.

74. ஸம்ஸாரம் என்ற யுத்தத்தில் வெற்றிபெற்று புத்தராக வேண்டிய புண்ணியமூர்த்தி, உயர்

நலமுள்ள பலன் தன் கையில் வைத்துக்கொண்டும், ஜனங்களின்மேல் தமக்குள்ள அன்பின் மிகுதியால் "பிறர்பொருட்டு இந்த உயர்நலமமைந்த பதவியை இழக்கிறேன், தவிர்க்கிறேன்." என்றார். இவ்விதம் உயர்ந்த மஹாத்தியாகத்தைச் செய்துள்ளார். அவரே உலகரக்ஷகர்.

கடை முறையில் ஆநந்தத்தின் எல்லையும் நீண்ட துக்கவழியும் இருக்கின்றமைகாண். கல்ப கோடிகாலங்கள் முழுமையும் துக்கத்தையே நாடுபவனே! இவ்விரண்டினுள் ஒன்றைத் தெளிந்து தெரிந்தெடுப்பாய்.

"ஓம் வயிரபாணி ஹூம்."

இரண்டு மார்க்கங்கள் முற்றும்.

ஓம் தத் ஸத்.

மூன்றும் பிரகரணம்.

# ஏழு வாயில்கள்.

1\. சீஷன் சொல்லுவது:— உபாத்தியாயரே! இரண்டில் ஒன்றைத் தெளிந்து தெரிந்தெடுத்துக் கொண்டேன். ஞானம்பெற மிகவும் தாகமுள்ளவனாக இருக்கிறேன். குப்தவழியை மறைத்துள்ள திரையை இப்போது நீர் அறுத்துவிட்டீர். உயர்ந்த வழியாகிய மஹாயாநத்தை உபதேசித்திருக்கிறீர். உம்முடைய தாஸன் நான். உம்முடைய வருதிப்படி நடைபெற இதோ இங்கே ஸித்தமாக இருக்கிறேன்.

2\. உபாத்தியாயர்:-"*சிராவகனே! நலம்தான்! நீ தனிமையாய் வெகுதூரம் யாத்திரைசெய்யவேண்டியவன். அதனால் அந்நிலைமைக்கேற்ப ஆயத்தம் செய்துகொள். குருவானவன் வழிமாத்திரம் காட்டுவான். வழி யாவருக்கும் ஒன்றே. அஃதுஒரேமாதிரி

*குறிப்பு:— சிராவகன் சிரவணம் செய்பவன். சமயமுறைகளைக் கேட்பவன். அதன்மேல் அநுஷ்டானத்தில் பயிலுகிறவன் சிரவணன்.

யானதுதான். லக்ஷியமான எல்லையை அடையும் சாதநங்கள் யாத்திரை செய்கிறவர்களைப் பொறுத்து வேறுபடுகின்றன.

3. ஓ! தீரனே! எந்நெறியைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறாய்? அக்ஷிமார்க்கத்தின் நான்குபடியுள்ள தியாநமுறையையா? அல்லது ஞாநத்தின் எழாம்படியான போதநிலையையா? இது பிரஞ்ஞைக்குக்கொண்டுபோய்விடும். உயர்நலமுள்ளஆறுசிலங்களாகிய ஆறு பாரமிதங்களையும் (தாநம், நீதி, பொறுமை, ஊக்கம், தபஸு, ஞாநம் என ஆறு.) இவையுடன் ஞாநமும் உன்னிடம் அமையும்படி செய்யப் போகின்றாயா? *

4. நான்கு படியுள்ள கரடுமுரடான தியாநமுறை சுற்றிச்சுற்றியுள்ளது; மலைபோன்று செங்குத்தானது, எற்றமுள்ளது. உயர் உச்சியைப்பிடிக்கிறவன், மும்முறை (அதிக) சிரேஷ்டன்.

5. பாரமிதங்கள் என்ற உயர் உச்சிகளை அடையும்பாதை இன்னும் அதிக செங்குத்தானது. வஞ்

*நேர்மையானசாதநம், சாஸ்திரஞாநம், சிரத்தை, லக்ஷியத்தைவிடாத பிடிப்பு இவை நாலும்சேர்ந்து 10 பாரமிதங்கள எனச் சொல்லப் பெறும்.

சகமுள்ள கோரமான ஆசாபாசங்களான எழுவாயில்களுடன் பெரும்போராட்டம் செய்யவேண்டும். அதன்மேல்தான் அது சித்திக்கும்.

6. சிஷனே! சந்தோஷமுள்ளவனாக இரு. பயம் வேண்டாம். சுந்தரமான உயர்நலமுள்ள ஆறுதல் பயக்கும் விதியை ஞாபகப்படுத்திக்கொள். அதாவது:—*சுரோதபத்தி என்னும் வாயிலைத் தாண்டியவனுக்கு, அதாவது சன்மார்க்கம் என்ற ஆற்றில் பிரவேசித்தவனுக்கு, அதாவது நிர்வாணபதத்திற்குக் கொண்டுபோய்விடும் ஆற்றின் அடிப்பாகத்தை இந்த ஜந்மத்திலாவது இனிவரும் ஜந்மத்திலாவது மிதித்திறவனுக்கு, ஏழே ஏழு பிறப்புக்கள்தான் அதன்மேல் உள்ளன. வயிரம்போன்ற உறுதிப்பாடுள்ளவனே, உனக்கும் உன்முன் ஏழு ஜந்மங்கள்தான் உள்ளன.

* குறிப்பு:—ஞானமுறையில் நான்கு படிகள் உண்டு. 1. சுரோதபத்தி, நிர்வாணம் என்னும் மஹாசமுத்திரத்திற்குப் போகும் நதியில் இறங்கியவன். 2. சகிர்தகாமின், இனிமேல் ஒரே ஜந்மம் எடுப்பவன். 3. அநாகாமின் இனிஜநநம் எடுக்காதவன். ஆனால் ஜநஉபகார நிமித்தம் சுயேச்சையாக எடுக்கலாம். 4. அர்கன் ஜீவந்தனாக இருக்கும் காலத்திலேயே நிர்வாண நிலையை அநுபவிப்பவன். அவன் சமாதி நிலையில் நிர்வாணத்தின் எல்லா ஆநந்தத்தையும் சாக்ஷாத்கரிப்பான்.

7. மேல்நோக்கிப் பார். திவ்விய ஞாநத்தைப் பெற அவா உள்ளானே! உன் கண்முன் என்ன தோன்றுகிறது? சீஷன் சொல்லுகிறான்:— பிரகிருதி என்ற ஆழமானஸமுத்திரத்தின்மேல் இருள் என்ற போர்வை மூடியிருக்கின்றது. அதன் மடிப்புக்களில் அகப்பட்டு நான் போராடுகிறேன். என் தோற்றத்தில், அதன் ஆழம் மேன்மேலும் பெருகிக்கொண்டு போகின்றது. என் நாதனே! உம்முடைய கையை ஆட்டவே அந்த மருள் நீங்குகிறது. மண்டலமிட்டுள்ள ஸர்ப்பம் விரிதல்போல, ஒருநிழல் போன்ற உருவம் சலிக்கிறது, ஊருகிறது, விருத்தியடைகிறது, பெருகுகிறது. இருளில் மறைகிறது.

8. குரு:—நீ செய்த பாபங்களான இருளின்மேல் உன்னுடைய நிழல் தோன்றுகிறது. அந்நிழல் வழியின் புறம்பாயுள்ளது,

9. சீஷன்:—"ஆம்! நாதனே! வழியைப்பார்க்கிறேன். கீழே அதன் அடிப்பாகம் சேற்றில் உள்ளது. அதன் உச்சி நிர்வாணம் என்ற கம்பீரமான தேஜஸில் மறைந்துள்ளது. ஞாநத்திற்குப் போகும் கஷ்டமான முள்ளுள்ள பாதையில் எப்போ

தும் குறுகிக்கொண்டு இருக்கின்ற வாயில்களை இப்போது பார்க்கிறேன்."

10. குரு:—சிஷனே, நீ பார்க்கிறது சரிதான். அந்த வாயில்கள் வழியாய் தீரனானவன் பிரகிருதி ஸமுத்திர ஜலங்களைத்தாண்டுகிறான். அதாவது ஸம்ஸாரத்தின் பாரத்தை அதாவது எல்லையைத் தாண்டுகிறான். நிர்வாண பதத்தை அடைகிறான். ஒவ்வொரு வாயிலின் கதவைத் திறக்க, ஓர் ஓர் சுவர்ணத்திறவுகோல் உண்டு. அத்திறவுகோல்களாவன-

(1) தானம், ஈகை, நித்தியமான அன்பு, இவைகளின் திறவுகோல்.

(2) சீலம்—மனம், மொழி, மெய் இவைகளின் நேர்மை. காரணத்தையும் காரியத்தையும் நேர்மையாக இணங்கும்படி செய்தலும் அதனால் கர்ம மூலம் அற்றுப் போதலுமான தன்மை.

(3) சாந்தி எதினாலும் சலிக்கக்கூடாத இனிமையான பொறுமை.

(4) வைராக்கியம்—சுகத்தில் விருப்பும் துக்கத்தில் வெறுப்பும் இன்மை; மருளை நீக்கப்பெற்ற உண்மை அறிந்த நிலை.

(5) வீரியம்—பிரபஞ்ச சம்பந்தமான பொய்யான களேபரத்தினின்று தப்பிவிலகி, கம்பீரமான சத்தியத்தை நோக்கிய நெறியை அடைதலின் தளராத முயற்சியும் திறலும்.

(6) தியானம்—இந்தசுவர்ணக்கதவு ஒருதடவை திறக்கப்பெற்றால், மாசற்றவனை ஞானி நித்தியமான சத்தியத்தை அடைகிறான். இடைவிடாமல்அதன்பால் தியானபரனாக ஆகிறான்.

(7) பிரஞ்ஞை — இந்தத்திறவுகோல், மனிதனைத் தேவனாக, போதிசத்வாவாக, தியாநிகளின் புத்திரனாக, ஆக்கும் தன்மையது.

இத்தன்மையான வாயில்களுக்கு, இத்தன்மையான சுவர்ணத்திறவுகோல்களாம்.

11. உன் சுதந்தரத்தை உன் கைக்குள் வைத்திருக்கும் தீரனே! கடைசியான வாயிலை அணுகு

முன், அலுப்பான இந்நெறியில் இந்த ஆறும், இந்தப் பத்துமான சீலங்களின் பூர்ணத்தை நீ அடையப் பாலது.

12. ஓ சீஷனே! உன் குருவை முகத்திற்கு முகம் நேராக சந்திக்கும்படியாக நீ ஆயத்தமாகு முன், ஜோதிக்கு ஜோதி நேராக, உன்குருவைச் சந் திக்குமுன், உனக்கு என்ன சொல்லியிருந்தது? அதை உன்னிப்பார்.

13. முகப்பில் உள்ள வாயிலை நீ அணுகுமுன் உன் மநத்தினின்று சரீரப்பற்றுக்களை அகற்ற நீ அறியவும், அவைகளின் நிழல்கூட உன் மநத்தில் விழாமல் தொலைக்கவும், நித்தியமான வஸ்துவில் நினைப்புள்ளவனாகி நீ உயிர்வாழவும் வேண்டும். இந்நிலையைப்பெற, நீ எல்லாவற்றிலும் ஜீவிக்கவும் உஸ்வாஸம் நிஸ்வாஸம் செய்யவும், எல்லாம் உன்னிடம் ஜீவிக்கவும், உஸ்வாஸம் நிஸ்வாஸம் செய்யவும், ஏற்படல் வேண்டும். எல்லாவற்றிலும் உன்னையும், உன்னில் எல்லாவற்றையும் உணரவேண்டும்.

14. உன் மநத்தை, இந்திரியங்கள் விளையா டும் கூடமாக விடாமல் தடுக்கவேண்டும்.

15. நான் வேறு, நீ வேறு, அது வேறு என்ற வேற்றுமை பாவத்தைத் தவிர் ஒருமை உணர்வு கொள். ஜலத்துளியில் சமுத்திரத்தையும், சமுத்தி ரத்தில் ஜலத்துளியையும் அமையுறும்படி செய்.

16. இவ்விதம் ஒழுகுவாயாகில், எல்லா பூதங் களுடன் நேர்மையாக அன்புடன் இருப்பாய். ஒரே குருவினிடம் கற்கும் சகபாடிகளைப்போலவும், ஒரே தாய் வயிற்றின் புத்திரர்களைப் போலவும், எல்லா ஜநங்களையும் நினை; அவர்கள்மேல் அன்புவை.

17. குருக்கள் அநேகர் உண்டு. ஆத்மா (ஆலயம். சகல பூதங்களிலும் அந்தர்யாமி) ஒருவர்; அவரே உன் குருநாதன். நீ அக்குருநாதனின் ஓர் ரஸ்மியாக இருப்பதாக மதி. அவ்விதம் அவரிடம் பிராணன் உள்ளதாக நட. உன் தோழர்கள் எவ்வி தம் அந்த ஆத்மாவான குருநாதனிடம் இருக்கின்றார் களோ, அவ்விதமே நீயும் அவர்களிடம் இருப்பதாக நினை. அவ்விதம் நடைபெறுவாய்.

18. இந்நெறியின் முகப்பான வாயிலில்நிற்கு முன், முகப்பான வாயிலைத்தாண்டுமுன், இரண்டையும் ஒன்றுபடுத்தல் வேண்டும். மேல்மநம் (ஜீவாத்மா) கீழ்மநம் (அசுத்தமநம்) இரண்டிற்கும் மத்தியில் உள்ள **அந்தக்கரணம்** என்ற பாதையை (பாலத்தை)நாசப்படுத்தல்வேண்டும். சுயலாபத்தைக் கருதும் மநத்தைத் தொலைத்தல் வேண்டும். பிறர் நலம்கருதும் சுத்தமநத்தை ஸ்திரப்படுத்தல் வேண்டும்.

19. உன் முதல் படியில், என்றும் தவறாத **தர்மம்** என்பது உன்னைச்சிலகேள்விகளைக்கேட்கும். அவைகளுக்கு சமாதாநம் சொல்ல நீ ஆயத்தமாகஇருத்தல்வேண்டும். அவையாவன:—

(1) உயர்ந்த லக்ஷியத்தையும் நம்பிக்கையையுமுடையானே! எல்லா விதிமுறைகளையும் அநுஷ்டித்தாயா?

(2) ஜநஸமூகத்தின் ஸமஷ்டிமநம் ஸமஷ்டிஹிருதயம் இவை இரண்டுடன், உன் மநம், உன் ஹிருதயம் இசைந்து நேர்மையாக இருக்கும்

படி செய்துகொண்டிருக்கிறாயா? * புண்ணிய நதிகளின் பேரொலி எவ்விதமாக உலகத்தின் இயற்கையான சப்தங்களின் எதிர் ஒலியாக ஏற்படுகிறதோ, அவ்விதமே, சுரோதபத்தியாக வேண்டுபவனின் மநமும் ஹிருதயமும், எல்லா ஜீவராசிகளின் துன்பமும் துயரமும் அவையால் உண்டாம் பெருமூச்சையும் தம்முடையனவாக உணரும் இயல்பினவாக ஆகவேண்டும். அவன் எந்த ஜீவராசியின் மநம் நொந்தாலும், அதைத்தன் நோவாகமதிக்கும் தன்மையை உடையவனாக ஆக வேண்டும்.

20. சிஷ்யர்களே, மநத்திற்கு இசைந்து தொனிக்கும் வீணையின் தந்திகளுக்கு உவமிக்கலாம்.

---

* வடக்கே உள்ள புத்தசமயிகளும் சீனர்களும், உலகத்திற்கே, ஒருஸ்வரம் உள்ளது என கவனித்துத் தெரிந்திருக்கிறார்கள். பெரிய நதிகளின்பேரிரைச்சல், வநங்களில் உள்ள மரங்களின் உச்சிகளின் சலசலப்பு, பெரியநகரின் தூரத்தில்கேட்கும் சப்தம், இவை ஒருருபித்த ஸ்வரமாக வியக்தப்படுகின்றன என, பிரகிருதிதத்துவசாஸ்திரிகள் (Physicists) கண்டறிந்திருக்கிறார்கள். இதைச் சீனர்கள் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் கண்டுபிடித்துள்ளார். "ஹொஆங்ஹோ" என்ற சீனதேசத்தில் உள்ள நதி வேகமாய்ச் செல்லுகிறதில் "குங்கு குங்கு" என்று ஒலிக்கிறதாம். அந்த ஸ்வரத்தைச் சீனர்களின் சங்கீத சாஸ்திரத்தில் "பெரிய தொநி" என்று சொல்லுவார்கள். நம்தேசத்தில் இவ்விதமான அபிப்பிராயமும் உண்டு. ஜகத்திற்கு ஸமஷ்டியாகிய ஒரு மூலநாதம் உண்டென்றும், அது "ஓம், ஓம்" என்றபிரணவதொநியென்றும், சூக்ஷ்மமாகக் கவனித்தால் அது தெரியவருமென்றும் சொல்லுவார்கள்.

ஜநஸமூகத்தை, தொநியை அபிவிர்த்திக்கும் அதன் சுவரைக்குடுக்கைக்கு உவமிக்கலாம். அவ்வீணையைத் துலாவும்கையை, உலகநியந்தாவான ஈசனின் உலகஸம்ரக்ஷணைக்கு ஆதாரமான இனியநாதத்திற்கு ஒப்பிடலாம். குருநாதனின் ஸ்பரிசத்திற்கு இசைந்து நேர்மையாய் இனிய காநங்களை அத்தந்திகள் தொநிக்காவிடில், அவை அறுபடும்; எறியப்படும். சிராவகர்களான சிஷர்களின் மநங்களும் இவ்விதமே நேர்மையாக நிகழவேண்டும். உபாத்தியாயரின் மநத்துடன், சிஷர்களின் மநங்கள் நேர்மையாக இசைந்து ஒருமையாக வேண்டும். உபாத்தியாயர் மநமோ ஈசுவரனின் மநத்துடன் இசைந்து நேர்மையாக நிகழும். சிஷர்களின் மநங்கள் அவ்விதம் நேர்மைப்படுத்தப்படாவிடின், குரு சிஷ்ய சம்பந்தமும் அற்றுப்போம்.

21. இவ்விதமாக, வாமமார்க்கத்தினர்களான ஆத்மஹத்தி புரிகின்றவர்கள், ஊனை ஓம்பும் அறிவிலிகள் செய்வார்களே. இவ்விதமே நாசமுறுவார்கள்.

22. ஞாநப்பிரகாசம் விரும்புவோனே! ஜநசமூகத்தின் துன்பத்தால் உன் மநம் இளகும் தன்மையத்தாக ஆகிவிட்டதா?

அப்படித்தானு? அப்படியாயின் இந்நெறியில் பிரவேசிக்கலாம். ஆயினும், துக்கம் தோய்ந்த பயங்கரமான அக்கொடிய நெறியில் நீ கால் வைக்கு முன், அந்நெறியில் தடுமாற்றங்களுக்கு ஹேதுவாகும் பள்ளங்கள் இன்ன இன்னவை என நீ அறியப் பாலது.

23. ஈகை, அன்பு, மநஇளக்கம், ஜீவகாருண்ணியம், என்ற திறவுகோலை வைத்துக்கொண்டு, **தாநம்** என்ற வாயில் முன் நீ சாவதாநமாய் இருக்கிறுய். இந்நெறியில் இதுவே முதன்மையில் உள்ள வாயில்.

24. ஆநந்தமாய் யாத்திரை பண்ணுகிறவனே! கவநமாய்ப்பார்! உன் முன்னுள்ள வாயில், உயரமாயும் அகன்றதாயுமிருக்கிறது. இலகுவாய்த் தாண்டலாம் எனத் தோன்றுகிறது. அதன் மூலமாய்ச் செல்லும் பாதை நேராகவும், சமமாயும், பசுமையாகவும் இருக்கிறது. அஃது அடர்ந்து இருண்ட காடுகளின்கண்ணுள்ள சூரியப்பிரகாசமுள்ள மைதானுப்போன்றுள்ளது. அஃது **அமிதபாவின்** திவ்விய லோகத்தின் பிரதிபிம்பம் போன்றுள்ளது. அங்கே

இரவில் காநம் செய்யும் பறவைகள் (Nightingales) என்ன, பிரகாசிக்கின்ற இறக்கைகளை உடைய பறவைகள் என்ன, இவைகள் பசுமையான கொடிகளால் அமையப்பெற்ற பர்ண சாலைகளின் மேல் உட்கார்ந்துகொண்டு யாத்திரைக்காரர்களான தீரர்களுக்கு உத்ஸாகமும் ஜயம் பெறுதலில் நன்னம்பிக்கையும் உண்டாகும் வண்ணம்,இனிமையாய்க் காநம் செய்கின்றன. புத்தராகவேண்டுபவரின் சீலங்கள் ஐந்தையும், போத நிலையின் சக்தியின் ஐந்து வகையான உற்பத்தி முறைகளையும், ஞாநப்பயிற்சியிலுள்ள எழு படிகளையும், புற்றி அவை காநம் செய்யும்.

25. செல்லுவாயாக. திறவுகோல் உன்னிடம் இருக்கிறது. உனக்குப் பயமில்லை. சாவுதாநமாய் இருக்கிறாய்.

இரண்டாம் வாயிலுக்கு வழியும் பசுமையானதுதான்; அதுசெங்குத்தாகஇருக்கிறது; குன்றின் மேல் ஏறவேண்டும்; அதன் கற்சிகரத்துக்குப் போக வேண்டும்; அதன் கற்கரடுள்ள சிகரமானது மந்தமான மஞ்சியால் மூட்டம் பெற்றிருக்கிறது; அத

ற்கு அப்பால் எல்லாம் இருட்டாகவிருக்கிறது. அவன் (அப்பியாஸி) போகப்போக நன்னம்பிக்கையை உண்டுபண்ணிய காகம் மந்தமாகிக்கொண்டுவருகிறது. வர வர மெல்லினமாகிக்கொண்டு வருகிறது. அவன் ஹிருதயத்தில் நன்னம்பிக்கை வர வரக் குறைந்துகொண்டு வருகிறது. சந்தேகம் கொஞ்சம் தொங்கிக்கிறது. அதனுல் அவன் நடையில் நிலைப்பின்றி பெருகிய தடுமாற்றம் உண்டாகிறது.

26. இந்நெறியில் பயிலுகின்றுனே! இதைக் கவனிப்பாய். முன்னர் எச்சரிக்கையாயிரு. பயம் உன்னைப்பற்றுமல் பார்த்துக்கொள். உன் உள்ளத்தில் உதயமாகும் சந்திரப்பிரகாசத்துக்கும், தூரத்தில் நீ சிந்தித்திருக்கிற உயர் நலமுள்ள லக்ஷியத்திற்கும் மத்தியில், நிசிராத்திரியில் பறக்கும் வௌவால் போல இந்த வஞ்சகமான பயம் குறுக்கிடும் காண். இதைப்பற்றிக் கவனம்கொள்.

27. பயம் கொடிது, கொடிது; ஓ! சிஷ்னே! பயம் மனோதைர்யத்தைத் தளர்த்தும், தொலைக்கும், செயலைத் தடுக்கும். சீலம் என்ற குணம் குன்றினல்

யாத்திரைக்காரன் இடறுவன். இந்தக் கரடு முரடான வழியில் முன் வினைப்பயனாய் ஏற்பட்டுள்ள இடையூறுகளான கற்கள் பாதங்களைக் கீறும், அறுக்கும், இரக்தம் வரும்படி காயப்படுத்தும்.

28. சீஷனே! உன் காலைச் சாவதானமாய் வை. சாந்தி என்ற நீரில் உன் மனம் ஸ்நானம் செய்யட்டும். அப்பெயருள்ள வாயிலைச் சமீபிக்கிறாய். அதுவே பொறுமை, தைர்யம் அமைந்தவாயில்.

29. கண்களை மூடாதே. வயிர முத்திரையின் லக்ஷியத்தை விடாதே. (இது ஒருவித ஆஸநமும் முத்திரையுமாம்). இந்நிலையில் வைராக்கியத்தைப் பெறாதவன் மருளால் மதிமயங்குவான்.

30. நடுங்காதே. மனம் கலங்காதே. பயம் என்ற காற்று சொற்பம் அடித்தாலும், சாந்தி என்ற திறவுகோல் துருப்பெறும், சிக்கலாகும். துருப்பெற்ற திறவுகோல் கதவைத் திறக்காது.

31. நீ மேன்மேலும் செல்லச்செல்ல, இந்நெறியில் படு குழிகளை அதிகமாகவே காண்பாய். இந்

நெறியில் செல்லுகிறவனுக்கு ஒரே வெளிச்சம் வழி காட்டும். அது தன் ஹிருதயத்தில் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் தைர்யம் என்ற ஜோதிதான். அது இவன் துணை. தைர்யம் கொள்ளக் கொள்ள, அது விர்த்தியாகும். பயம் கொள்ளக் கொள்ள, தைர்யம் என்ற வெளிச்சம் மங்கும். தைர்யம் ஒன்றுதான் வழித்துணை. அந்திப்பொழுதில் சூரிய அஸ்தமனமாகும் தருவாயில், மலை உயர் உச்சியில் கடைசியாகத் தங்கும் சூரிய ரஸ்மியானது, மலை வாய்ப்படவும், மறையவும், காரிருள் உண்டாதல் போல, தைர்யமென்ற சூரிய ரஸ்மி மறையவே, போகவே, இருண்ட பயங்கரமான மருள் உன் பாதையில் படும். நின்ற இடத்திலேயே உன்னை இறுத்தும்.

32. அந்த கதி வராமல், சிஷனே, காத்துக் கொள். உன் அசுத்த மநத்திற்கு, எத்தன்மையான ஆத்மப்பிரகாசமும் பயன்படாது. காமனைகள் எல்லாம் தொலையவேண்டும். எல்லாச் சுயலாப சிந்தனையும் அகலவேண்டும். இந்நிலையுள்ளவனாக இருக்கவேண்டும். "அழியும் இச்சரீரத்தைத் துறந்து

இருக்கிறேன். அதன் காரணமாம் அவாவைநசித்துப் போட்டேன். அதனால் எற்பட்ட நிழல்கள் இனி என்னை பாதிக்காவாம்" இப்போதுதான், சுத்தமநத்திற்கும் அசுத்த மநத்திற்கும் பெரும்போராட்டம் உண்டாகும். * இந்தப் பெரிய யுத்தத்தில், இந்தச் சண்டை அடங்கும். கவனித்துப்பார். இச்சண்டையைக்காணோம்.

33. சாந்தி என்றவாயிலைத்தாண்டினால், மூன்றாம்படிஎறுகிறாய். உன்சரீரம்உனக்குஅடிமை. உன் சேவகன். நான்காம்படிக்கு, ஆயத்தம்செய்துகொள். உன் உள்ளத்தைக்கவரும், மயக்கும், ஆசாபாசங்கள் இவ்விடத்தில் உள்ளன.

34. அந்த நான்காம் வாயிலை அணுகுமுன் அந்த வாயிலின் கதவு திறக்க உன்கையைத் தூக்குமுன், உன்மநத்தில் எழும் விர்த்திகளை எல்லாம் அடக்கவேண்டும். நுட்பமாய் நீ அறியாமல், வஞ்சகமாய் உன்னுள்ளம் என்றபிரகாசமானகோயிலுக்குள், பதுங்கிநுழையும் இந்திரியச் சேஷ்டைகளால் உண்டாகும் எண்ணங்களை அறுத்தல்வேண்டும்.

---

*இதுவே கீதையில் சொல்லியிருக்கும் குருக்ஷேத்திரச்சண்டை

35. அவைகள் உன்னை மேற்கொள்ளாமல் இருக்க விரும்புவாயாகில், உன் மாநஸிகபுத்திரர்களாகிய அவ்வெண்ணங்களை, அச்சிந்தனைகளை, உனக்குக் கெடுதல்செய்யாதபடிச்சக்தியற்றவைகளாகச்செய்துகொள்ளு. ஒருவரும் பாராமலும் ஒரு இந்திரியத்துக்கும் புலப்படாமலும் மனிதனால் ஏற்பட்ட சந்ததிகளாகவும் அவனால் பூமியில் உண்டுபண்ணிய வார்சுகளாகவும் அவனைச் சுற்றிக்கொண்டே அவைகள் நிகழ்கின்றன. தோற்றமாத்திரத்தில், பூர்ணமாயிருத்தலில்பாழையும், அவ்விதமேதோற்றமாத்திரத்தில், பாழாய் இருத்தலில் பூர்ணத்தையும், நீ ஆராய்ந்து அறியவேண்டும், ஓ! தீரனே! உன் ஹிருதயமென்ற ஆழமான கிணற்றை நன்றாய்உள் நோக்கிப்பார். அத்துடன் ஒத்திரு. வெளித்தோற்றங்களைப் பார்க்கின்றவனே உன்னுள்ளத்தின் சக்திகளை நீ அறிவாயா? அதை அறியாமற்போனால், நீ கெடுவாய்.*

36. நான்காம் படியில் நடைபெறுகிறவனுடைய மநத்தில், காமனையின் காற்று சொற்பமே

---

*முகத்திற்கண் கொண்டுபார்க்கும் மூடர்காள் அகத்திற்கண் கொண்டுகாண்பதே ஆநந்தம்

என்றதிருமூலர் வசநம்இங்குகவனிக்கத்தக்கது

னும் அடிக்குமாகில், சலனமற்ற மநம் என்ற சுவரில்படும் அசைவற்ற ஜோதிஸுக்கு ஒரு சலனம் உண்டாகும்- மாயா உலக விஷயங்களில் விருப்பு அல்லது துக்கம் என்ற அலை சிறிதேனும் அந்தக்கரணத்தில் ஜனிக்குமாகில், மின்னல் போன்று ஒரு கணப்பொழுதேனும் இருக்குமாகில், சிரமத்தினல் முன்னேறிய மூன்று படிகளினின்று நீ நழுவி விழுவாய். நித்தியமான வஸ்துவினிடம் மாறுதல் இல்லை. அந்தக்கரணம் என்பது உனக்கும் ஆத்மாவிற்கு நடுவில் உள்ளபாதை. அப்பாதையில் இந்திரியங்கள் விளையாடுகின்றன. இந்திரியங்களோ அகங்காரம் என்பதை எழுப்பும் தன்மையன.

37. பூர்வீகர்களின் ஸம்பிரதாய முறைகளை அனுஷ்டித்தவரான, ததாகதர் என்ற கௌதம புத்தர் அருளிய உபதேசமாவது—"எட்டுவிதக்கொடிய துக்கங்களை, முற்றும், என்றும், உன்னைப்பற்றுமல் விலக்கு; இன்றேல், ஸ்திரமான ஞானநிலையை அடையமாட்டாய்: மோக்ஷம் என்ற நிர்வாணபதத்தைப் பெறமாட்டாய்."

38. வைராக்கியம் என்ற குணசம்பத்தானது நேர்மையானதாகவும், கண்டிப்பானதாகவும் இருக்கிறது. இந்நிலையின் உண்மையை நன்றாய் அறிந்து உரிமைப்படுத்துவாயாயின், உன் மநத்தையும், இந்திரிய ஞாநத்தையும் முன்னர்விட அதிகத்தெளிவாக்கவேண்டும். கர்மம் செய்யாமலிருத்தலில் முன்னரைவிட நீ அதிக சுதந்தரமுள்ளவனாகவும் ஆகவேண்டும்.

39. பரிசுத்தமான (ஆலயாவால்) சைதந்நியத்தால், உன்னை நிறைப்பிக்கொள்ளு. ஈசுவர சங்கற்பத்துடன் ஒருமைப்படுவாய். அத்துடன் ஒருமைப்படுவாயாகில், உன்னை வெல்ல ஒருவராலும் இசையாது. அதினின்றுவேறுபடுவாயாகில் உலகமாயாவிகாரங்களுக்குக் காரணமான ஸம்விர்த்தி சத்திய*த்திற்குள்ளாகி, அதன் விளையாட்டுக்கு இருப்பிடமாக ஆவாய்.

40. ஆலயாவின் ஆத்மபிரகாச அம்சத்தைத்தவிர, மனிதனிடமுள்ள மற்றவை எல்லாம் அஸ்தி

* பாமார்த்திக ஸத்தியம், ஸம்விர்த்தி சத்தியம், என சத்தியம் இருவகைத்தாம். முன்னது உள்ளபடியான உண்மை—பின்னது ஆபேக்ஷித உண்மை. வாஸ்தவத்திலில்லை. இதுவே வியவஹார சத்தியமெனப்படும்.

ரமானவை. மனிதன் என்பான், ஆலயாவின் சுத்த நிர்மலமான ஓர் ரஸ்மி. அவன் உள் நோக்கில் நிர்மலமான பிரகாசமான கிரணம், சுடர்; வெளிப் பார்வையில், கீழே களிமண்ணுலாய உருவம். அக்கி ரணம், கதிர், சுடர், ரஸ்மி என்பதானது உன் உயிர்த் துணை; அது நீ என்று சொல்லப்படும் வஸ்து; காவலன், மௌநமான நினைப்புத்தொழிலாளன். அசுத்தமநத்தினால் கட்டுண்டு அதன் பலியாவான்; தடுமாற்றமுள்ள சரீரத்தால், உன் மநம் துன்பமுறும். அவை இரண்டையும் வசப்படுத்து, மேற்செல்லு. அப்படி செய்தால் சமீபிக்கின்றத், தராசுபோன்றவாயிலுக்குத் தாண்டிச் செல்லுதல் சாவதானமாக இருக்கும்.

41, அக்கரையேற ஆயத்தமாக இருக்கின்ற தீரனே! மநம் தளராதே, சந்தோஷமாக இரு, ஆசாபாசங்களின் வஞ்சனையான மயக்கத்திற் குள்ளாகாதே. உன்னைத் தாழ்த்த கருதும் பலவிதமான துர்தேவதைகளின் மோசமான ஏய்ப்புக்களை சவனியாதே; அவைகளை அலக்ஷியம் செய்.

42. உறுதியாய் இரு. மத்தியிலுள்ள வாயிலை இப்போது அணுகுகிறாய். அதுவோ துக்ககரமான

வாயில். அதனிடம் பதினுயிரக் கணக்கான வஞ்சகமான கண்ணிகள் உன்னைப்பிடித்து வசப்படுத்த ஏற்பட்டுள்ளன.

43, பூர்ணம் பெற விரும்புவோனே! அந்த வாயிலைத்தாண்ட விரும்புவாயாகில், உன் எண்ணங்களை சுவாதீனப்படுத்து; சித்தவிர்த்திகளை அடக்கு.

44. நித்தியமான உண்மைகளை அறிய விரும்புவோனே! அந்த எல்லையை அடையப் பிரியப்படுவாயாகில், உன்மநத்தை சுவாதீனம் செய்துகொள்.

45. மாசற்றதும் சுத்தமானதுமான அந்தர்கதமான ஜோதியை உன் மநக்கண்ணால் உற்றுப் பார். உன்னிடம் உள்ளச்சுவர்ணத்திறவுகோலை உபயோகப்படுத்து.

46. கஷ்டமான வேலை முடிந்தது. அநேகமாக நீசெய்யவேண்டியமுயற்சியும் முடிவுபெற்றது. உன்னை விழுங்கும்படியான அகன்ற ஆழ்ந்தபாழின் மேல் பெரும்பாலும் பாலமும் போட்டாய்விட்டது.

47. மனிதனின் ஆசாபாசங்கள் என்றவாயில் முகப்பை சுற்றியுள்ள அகழியை இப்போது தாண்

டிவிட்டாய். அரிஷட்வர்க்கங்களான காமக்குரோதா திகளையும், அவைகளின் கூட்டங்களையும், ஜயித்து விட்டாய்.

48. உன்னுள்ளத்தின் களிம்பை அதாவது மாசை அகற்றி விட்டாய். அசுத்த காமனைகளை அதினின்று துறத்தி விட்டாய். கம்பீரமான யுத்த வீரனே! ஆயினும் உன்வேலை இன்னும்முடியவில்லை. பரிசுத்தமான தீவுபோன்றுள்ள பிரத்தியகாத்மாவை சுற்றிலும் உயர் சுவரை எழுப்பு, இந்த உயர் நலம் அமைந்த பராக்கிரமச்செய்கையை நிறைவேற்றிவிட்டேனென திர்ப்தியும் இறுமாப்பும் உன்மனம் கொள்ளற்க.

49. இறுமாப்புக் கொள்ளவே, அதனால் செய்தவேலைபாழாகும். வெற்றியை அடைந்தாலும், ஸம்ஸார ஸாகரத்தில் உண்டாகும் அலைகள் மோதி உன்னுள் இருக்கின்ற பரிசுத்ததீவான பிரத்தியகாத்மாவையும் உன்னையும் ஆழ்த்தி விழுங்கி விடாமல், அந்த சுவரை பலமாய் எழுப்பு.

50: முன் பிரஸ்தாபித்த, தீவு என்பதை ஒரு மானுக எண்ணு. உன் சித்த விர்த்திகளை உயிரின்

பிரவாக கதியில் உன்னை நடத்துகிறவும் உன்னை ஹிம்ஸிக்கிறவுமான வேட்டை நாய்கள்போன்றன என மதி. தூய்மையான பரமார்த்த ஞானம் அல்லது ஸ்வஸம்வேதநம் (தன்னைத்தான் அறிதல் என்பது பொருள்) என்று பெயர் பெறும் ஞாந மார்க்கத்தை அடையுமுன், சூக்ஷ்ம அந்தக்குரூர மான நாய்கள் மேற்கொண்டால், அம்மானுக்குவரும் கேடு, அந்தோ! என்சொல்லுவேன்!

51. ஞாநமார்க்கத்தில் ஸ்திரமாய் நீ நிற்க வேண்டுமென்றால், அது உனதாக ஆகவேண்டு மென்றால் சுகதுக்கங்களைத் தாண்ட விரும்புவோனே! உன் மநம் பழுத்த மாங்கனிபோல ஆதல் வேண்டும். அதன் சதை எவ்விதம் மிருதுவாகவும் இனிமையாகவும் இருக்கிறதோ, அவ்விதம் பிறர் துக்கம் துயரங்களில், உன்மநம் இளகவேண்டும். அதன் உள் கொட்டையானது எவ்விதம் கடின மானதாக இருக்கிறதோ, அவ்விதம் உன் சொந்த துக்கம் துயரங்களில், மநம் இளகாமல் உறுதியாக வும் மனச்சோர்வில்லாமலும் இருத்தல் வேண்டும்

52. அசங்காரத்தின் வலைகளில் சிக்காமல் உன் மநத்தை உறுதி பெறும்படி செய்துகொள். * வஜ்ஜிரதர என்ற பெயர் பெற அருகனுவாய்.

53. பூமியின் கண் புதைந்துள்ள வயிரக்கல் பூமியின் மேலுள்ள பிரகாசங்களை எவ்விதம் பிரதி பிம்பிக்காதோ, அவ்விதமே உன் மநமும் உன் ஆத்மாவும் இருக்கின்றன. தியாந மார்க்கத்தில் முற்றும் அழுந்தியவனுக நீ இருக்கின்றமையால், மாயப்பிரபஞ்ச விஷயங்கள் அவைகளில் பிரதிபிம்பிக்கப் பெறு.

54. அந்நிலை பெற்றுயானுல், மார்க்கத்தில் இனி தாண்டவேண்டிய வாயில்களின் கதவுகள் தாமே திறந்திடும், நீ சுகமாய்ச் செல்லலாம். பிரபஞ்சத்தின் மஹாபலமானது எதும் உனக்கு லக்ஷியமில்லை; உன் கதியைத்தடுக்க இயலாது. இனி நீ மேற்செல்ல யாதொரு தடையுமில்லை. எழுபடியுள்ள மார்க்கத்தின் யஜமானன் ஆகிவிட்டாய். அது உன் சுவாதீநமாயிற்று. வாயால் சொல்ல முடியாத பல சோதனைகளுக்கும் துக்கங்களுக்கும் உட்பட்டு

* உயர்வற உயர்நலம் பெற்ற புத்தரின் பெயர்.

நடைபெறுகின்ற சீஷனே? அந்நிலையைப் பெற்றா யானால் உன்னைத்தடுக்க யாவராலும் இயலாது.

55. அந்நிலையைப் பெறும்வரை, மேன்மேலும் பெருகிய சோதனைகள் உண்டு. உன்னை, சிந்தனை வடிவாய் நீ உணரவேண்டும், ஆனால் உன் மனம் சிந்தனை அற்று இருத்தல் வேண்டும்.

56. உலகப்பற்று என்ற எந்த காற்றும் உன்னை சலிப்பிக்காதபடி, சித்த ஏகாகிரகம் பெற வேண்டும். ஒரு நிலைப்பட்ட மநத்தினனாய்ஆகவேண்டும். இவ்விதம் புநிதனாய், உள்ளம் என்ற கோயில் கிரியை,சப்தம், உலகசம்பந்தமானவெளிச்சம்,இவைகள் அற்றதாய் இருத்தல் வேண்டும். உறைபனியால் பிடிக்கப்பெற்ற வண்ணாத்திப் பூச்சியானது, உயிர் உள்ளடங்கி சவமாய் வாயிற்படியில் விழுமாறு உலக சம்பந்தமான எல்லாச் சிந்தனைகளும், அக்கோயில் முகப்பில் சவமாய் மடியவேண்டும்.

57. இதோ! எழுதியிருக்கும் உபதேசத்தை உற்றுப்பார்:—"காற்றில்லாத இடத்தில்உள்ள விள

க்கு அசையாமல் இருத்தல் போல, யோகியின் மநம் அடங்கவேண்டும்." * சலிக்கும் காற்று அடிக்க, விளக்கு அசையும், அப்படி அசையும் ஜ்வாலே, மருளான, வஞ்சகமான, நிழலே உண்டாக்கும். மயலுள்ள அந்நிழல் உன் சுத்தமான உள்ளம் என்ற கோயில்மேல் படியும், பின்பு அதனுல், சத்தியத்தை நாடுபவனே! காட்டில் திரியும் மதங்கொண்ட யானைபோல் உன் மநம் மாறிடும். காட்டிலுள்ள மரங்களை, தன் பகைகள் என நினைந்து மதிமயங்கி, எப்பொழுதும் சலித்துக்கொண்டே இருக்கும். நிழல்களைக் கொல்ல வேண்டுமென்ற ஓய்வில்லா முயற்சியில் மாண்டு போவாய்.

58. எச்சரிக்கையாக இரு. தெய்வத் தன்மையான ஞாந பூமியை அடைந்தும் சுயலாபத்தை ஓம்பில், கால் இடறி மோசம்போவாய்.

59. எச்சரிக்கையாக இரு. தன்னை மறக்கிறேன் என நினைந்து, மநச்சுவாதீனத்தை விட்டு உன் வெற்றிகளின் பயனை இழந்து மோசம் போவாய்.

---

*கீதை 6-ம் அத்தியாயம்—19-ம் சுலோகம் பார்க்க.

60. அசைவற்று இரு. அதில் கவனம் வை. அற்பச்சலனம் உன்னை வீழ்த்திவிடும். அது நீ நடை பெறும் மார்க்கத்தினின்று அகற்றித் தள்ளிவிடும். சந்தேகம் என்பது பசைபோல் ஒட்டும். ஆழமான சேற்றில் விழுவாய்.

61. ஆயத்தம் பண்ணு. முன்னாலேயே எச்சரிப்பாய் இரு, முயன்று ஒருகால் தவரிப்போ யிருப்பாயாகில், தீரனே பயம் கொள்ளற்க. தைரியமாக போர் புரிக. திரும்பத் திரும்ப எதிர்த்து காரியத்தை சாதித்துச் செல்லுக.

62. பயமற்ற வீரன், தன் தேகமெல்லாம் காயங்கள் எற்பட்டு, இரத்தம் பெருகி ஓடினும், மனம் தளராமல் திரும்பத் திரும்ப பகையை எதிர்ப்பான். பகையை அவன் கோட்டையினின்று துறத்தி அப்புறப் படுத்துவான். அவனை வெல்லுவான். அவ்விதமே நீயும் நட. கஷ்டப்பட்டும் தோல்வி அடைகின்றவர்களே! நீங்கள் தோல்வி அடையினும், முன்போல தைர்யமாய் நீங்களும் நடமின். உங்களுள்ளம் என்ற கோட்டையைத் தாக்கும் பகைவர்களைத் துறத்துமின். வெற்றி கொள்மின்.

பேராசை, கோபம், த்வேஷம், இவைகளை அகற்றுமின். ஆசை என்பதின் நிழலே கூடாது. அதை அறுமின்.

63. ஜனசமூகத்தின் சுகிர்தத்தின் பொருட்டுப்பாடுபடும் புண்ணியனே! ஒவ்வொரு அபஜயத்தையும், உண்மையில்ஜயம்என்றே நினை. உண்மையான ஒவ்வொரு யத்தனத்திற்கும் உற்றகாலத்தில் பலன் உண்டாகும். சீஷன் ஹிருதயத்தில் முளை கொண்டு உண்டாம் சுகிர்தமான விதைகள் யாருமறியாமல் விர்த்தியடைகின்றன. ஒவ்வொரு யத்தனம்செய்யுங்கால், அவைகளின் தாள்களும் தண்டுகளும் பலமுறுகின்றன. நாணல்போல் சாய்ந்து கொடுக்கும்; அவை ஒடியா, அழியா. உற்றகாலம் அமைய, அவை புஷ்பிக்கும். *

64. ஆயத்தமாக நீ வந்தாயானால், உனக்குப் பயமில்லை.

* சீஷன் முயற்சிக்குங்கால் உண்டாகும் ஆசாபாசங்களின் இழுப்பு இதில் சொல்லியிருக்கின்றது. அவைகளை ஜயிப்பானாகில் அவைகள் நல்ல சீலம், ஞானசம்பத்து என்ற வித்துக்களுக்கு உரமாகும். நற்குணம் முதலியவை, பூர்வஜன்ம ஸம்ஸ்கார விசேஷத்தின் பயனும் என்று அறிக.

65. இனிமேல் எழுபடிகளில் 5-ம் படியில் உள்ள **வீரியம்** என்ற வாயில் வழியாய் மார்க்கம் தெளிவாய் ஏற்படுகிறது. தியானம் என்ற துறையை நீ அணுகுவாய். அது ஆறாம்படி. அதுவே போதநிலை.

66. தியானம் என்ற வாயில், ஸ்படிகம்போன்ற வெண்மையான சுவிச்சமான பாத்திரம். அதனுள் ஆத்மஜோதிஸான பிரஞ்ஞை என்ற சுவர்ணம் போன்ற தீபம் அசையாமல் பிரகாசிக்கின்றது.

67. நீ அந்த பாத்திரமாவாய்; இந்திரியங்களின் விஷயங்களை விட்டு உன்னை விலக்கிக்கொண்டிருக்கிறாய். உள்ளபடிபார்த்தல் உள்ளபடிகேட்டல் என்ற மார்க்கத்தில் நடைபெற்றாய். பிரஞ்ஞை என்ற ஜோதியின் முன்நிற்கிறாய். இப்போது திதிக்ஷை * என்ற நிலையை அடைகிறாய்.

68. ஒ சிஷ்யனே! நீசாவதானமாய்இருக்கிறாய்.

69. பாபங்களை தொம்ஸம் செய்பவனே! சுரோதபத்தியானவன் 7-ம் படியைத்தாண்டவே,

---

* திதிக்ஷை — ராஜயோகமுறையில் 5-ம் நிலைமை; பொறுமை, சகித்தல், சந்தோஷம் வந்தாலும் துக்கம் வந்தாலும் இரண்டிலும் மனம் மாறாமல் ஒருநிலையாய் இருத்தல் என்பதாம்,

பிரபஞ்சமுழுமையும் சந்தோஷிக்கிறது. பயபக்தியுடனே அவனைக்கொண்டாடுகிறது. பிரபஞ்சமுழுமையும் அவன் வசமாகிறது. "ஒருமஹாத்மா தோன்றியிருக்கிறார். ஒரு மந்வந்தரமுழுமையும் ஆளும்திறமையுடையவர் அவதரித்திருக்கிறார்" என, பிரபஞ்சத்திலுள்ள எல்லாவஸ்துக்களும் ஆரவாரிக்கின்றன. வெள்ளி(சுக்கிரன்) இரவில்புஷ்பிக்கும் புஷ்பங்களுக்கு இந்தநன்மையான சமாசாரத்தை தெரிவிக்கின்றது. இதை சிறு ஓடை அதன் கண்ணுள்ள சிற கூழாங்கற்களுக்கு அறிவிக்கின்றது. கருமையான சமுத்திர அலைகள், இந்த நலம் அமைந்த திவ்விய செய்தியை பாறைகளில் மோதுங்கால், கோஷிக்கும். மகரந்தங்களை சுமந்து கொண்டு உலாவும் இளம்தென்றல் பள்ள நிலங்களில் இந்த சங்கதியைப் பரப்பும். கம்பீரமான உயர்ந்தவிருக்ஷங்கள் இந்த சம்பவத்தை மெல்லிய கானத்தால் தொனிக்கும்.

70. இப்போது இவன் ஒரு வெண்மையான ஸ்தம்பமாக மேற்கே நோக்கியவனாக நிற்பான். அவன் முகத்தில் நித்தியமான சிந்தனை என்ற உதயசூரியன் தன்னுடைய கம்பீரமான முதற்கிரணங்

களைச் சொரிகிறான். அவன் மநம் திரையற்றதும் எல்லையற்றதுமான சமுத்திரம்போன்றிருக்கிறது. கரையற்றதாக எங்கும் பரவும் பிராணனையும் மரணத்தையும் தன் பலமான கையில் வைத்திருக்கிறான்.

71. உண்மையாகவே, அவன் பராக்கிரமமுள்ளவன். அவனிடமுள்ள சக்தி, இப்போது சுதந்தரம்பெற்றது. அவன் பிரஹ்மா, இந்திரன், இவர்களை விடவும், எல்லாதேவர்களை விடவும் உயர்வானபதவியை அடைந்தவன். இதனினும் பெரியபலனை உண்மையாகவே அவன் இனி அடைவான்.

72. இந்நிலையில் அவன் அடையும் சித்திகளையும் மஹிமைகளையும் சுவப்பிரயோஜனார்த்தமாக உபயோகிப்பானோ? மருள்நீங்கிய உத்தமபுருஷன் எவ்விதம் செய்வான்?

73. பிரபஞ்சத்தின் குப்தமான உண்மைகளை அறியவிரும்புவோனே! பரிசுத்தரானததாகதர் நடைபெற்ற நெறியை அனுஷ்டிப்பாயாகில், அச்சக்திகளும் சித்திகளும் மஹிமைகளும் சுவப்பிரயோஜனத்திற்காக அல்லவென அறிவாய்.

74. தேவர்கள் வசிக்கும் மேருமலையின் உச்
சியினின்றுவரும் ஜலங்களை அணைபோட்டு அடைப்
பாயோ? உன் சொந்தலாபத்தைக்கருதி உனக்குப்
பயன்படும்படியாய் வாய்க்காலில் அவைகளை விடுவா
யோ? காலசக்கிரங்கள்என்றமலை உச்சிகளின்வழியா
கப்பிறந்த இடத்தை நோக்கிப் போகும்படி அஜ்ஜல
ங்களைச்கடத்துவாயோ?

75. கஷ்டப்பட்டு சம்பாதித்த அந்த ஞான
வெள்ளம் உயர்நலமுள்ள தெய்வசம்பத்துப் பொருந்
தியது. அது இனிமையான ஜலமாக என்றும்
ஓடிக்கொண்டிருக்க வேண்டுமாகில், அதை ஒரே
இடத்தில் தங்கும்படியான சிறு குளமாகச்செ
ய்யாதே.

76. நித்தியரான அமிதபா* வினருடன் கூட்
டுறவாக காரியஞ்செய்ய நீ விரும்புவாயாகில்,
அதாவது ஈசுவரசங்கற்பத்தை நீ நிறைவேற்றவே
ண்டுமானல், இரண்டு போதிசத்வாக்களைப்போல
நீ பெற்ற ஞான ஒளியை மூன்று லோகங்களுக்கும்
உபயோகப்படும்படியாகச்செய்யவேண்டும்.

---

* அமிதபா — என்றால் பரபிரஹ்மம்.

குறிப்பு:— (பௌத்த மதத்தின் மஹாயாந ஸம்பிரதாயத்தில் அமிதபா என்ற அகண்ட ஆகாசத்தில் இரண்டு போதிசத்வாக்கள் உண்டு. அவர்கள் பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகம் என்ற மூன்று லோகங்களுக்கும் ஞாந ஒளியை அருளிகிறார்கள். அவ்வொளி யோகிகளின் மநத்தில் பட, அவர்கள் நலம் பெறுகிறார்கள். அதன்மேல் அந்த யோகிகள் மனிதர்களுக்கு நலம் செய்கிறார்கள்.)

77. நீ அடைந்திருக்கிறதும் சாதாரண மனிதர் பெறாததுமான தேவஞாந வெள்ளம் உன்னிடத்திலேயே தங்கிப்போகாமல், உன்னிடமிருந்து வேறு ஒரு பாத்திக்குப்போகவேண்டும். அவ்விதம் போகும்படியாக நீ ஒரு வாய்க்காலாக ஆகவேண்டும்.

78. சிஷனே! குப்தமார்க்கத்தில் நிற்பவனே! அம்மார்க்கத்தின் புதிய புநிதம்பயக்கும் ஞாநஜலம் கைப்பானசமுத்திரத்தின் அலைகளைத்திதிபிக்கும்தன்மையது என்று அறிவாய். அச்சமுத்திரமோ! துக்கங்களால் வருந்தும் ஜனங்கள் விடும் கண்ணீர்பெருக்கால் உண்டாகும் ஸம்ஸாரமான சாகரம் என்று நீ அறிவாய்!

79. அந்தோ! உயர்ந்த அகாசத்திலிருக்கின்ற ஸ்திரமான நக்ஷத்திரம் போன்று நீ பிரகாசிக்கும்படி ஏற்படுவாயாகில், அந்த ஆகாச ஜோதிஸ் பிறர்பிரயோஜனார்த்தமாகவே தன் பிரகாசத்தை வெளிவிடும். தனக்கு அற்பமேனும் பயன்படுத்திக்கொள்ளாது.

80. அந்தோ! மலைப்பள்ளத்தாக்குகளில் உறையும் சுத்தப்பனிக்கட்டி போன்று இருக்கிறாய். வெளிஸ்பரிசத்துக்கு, ஜில் என்றும், சுரணை அற்று போகும்படியான அவ்வளவு குளிர்ச்சிஉள்ளதாகவும், அப்பனிக்கட்டி இருக்கிறது. ஆனால் அஃது அதன் கீழே உறங்கும் விதைகளுக்கு உஷ்ணகரமான ஆதரவாய் அமைகிறது. பற்கிட்டும்படியானக் கொடிய வடக்குக் காற்று அப்பனிக்கட்டியைத் தாக்கும்கால், பசியை ஆற்றக்கூடியதும் அறுக்கவேண்டியதுமான மகசூல் பலனுள்ள பூமியை அப்பனிக்கட்டியானது அக்கொடிய குளிரினின்று பாதுகாக்கும் தன்மையதாகும்.

81. பிறர் நன்றி அறிதலை பாராட்டாமலும், அதை எதிர்பாராமலும், பிறர் அறியாமலும், இனிவரும் அநேக கல்பகாலங்களில், நீ, தானே சுவே

ச்சையாய் ஜீவிக்கிறாய். ஜனசமூகத்தின் * இரக்ஷணச்சுவரின் கணக்கில்லா கற்களில் ஒரு கல்லாக நீ அமைகிறாய். ஏழாம் வாயில் தாண்டுகிறவனான உன் முன்னர் நிற்பது இதுவே. இந்த ரக்ஷணச்சுவர் கருணாநிதிகளான அநேக மஹாத்மாக்களின் கைகளால் நிர்மாணிக்கப்பெற்றிருக்கிறது. மனிதன் நோய்மையான மநமுடையான் ஆகையால், அதிகக்கொடிய பெருகிய துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அவன் உள்ளாகாமல் அவனைக் காப்பாற்றும் வண்ணம், இச்சுவர் ஏற்பட்டுள்ளது.

82. இப்படி இருந்தும், இதை மனிதன் அறிகிறான் இல்லை; பார்க்கிறான் இல்லை; அந்த ஞாநக் மொழியைக் கேட்கிறான் இல்லை.

83. சுத்தமான மநமுடையானே! நீ இதைக் கேட்டிருக்கிறாய். அதனால் சரியானபடி தெளிந்து தெரிந்து நட. மறுபடியும் சொல்லுகிறேன் கேள்.

---

* நிர்மாணகாயர்களான சித்தர்கள், யோகிகள், மஹாத்மாக்கள், இவர்கள் நெடுங்காலமாய் செய்துவந்த நன்முயற்சிகளான சத்சங்கற்பங்கள் திரண்டு ஒருங்கு சேர்ந்து இனி அதிகக்கேடு வராமல் ஜனசமூகத்தின் இரக்ஷிப்புச் சுவரென்று ஏற்படுகின்றன. இவ்விதம் காலபரம்பரையான ஞாநஉபதேசமுள்ளது.

84. சன்மார்க்கத்தில்,சுரோதபத்தியானாய் நீ. சாவதானமான நிலையைப்பெற்றிருக்கிறாய். அம்மார்க்கத்தில், களைப்புற்றயாத்திரைக்காரன் இருளைத் தான் சந்திப்பான்;முட்களால் கீறப்பெற்றுக்கைகள் ரத்தம் சொறியும்; கெட்டியானவும் கூர்மையானவுமான சக்குமுக்கிக்கற்களால் பாதங்கள் பிளவுபெறும்; நோதலடையும்; கொடுமைகள் எல்லாம் சம்பவிக்கும். ஆயினும், அப்பால் சுகிர்தமுண்டு; பெரிய பலன் உண்டு.

85. சாந்தமாயும், பொறுமையாயும், மநம் தளராமல், ஞானயாத்திரை செய்பவன் நிர்வாணபதத்திற்குப்போகும் வழியைப்பற்றிக்கொண்டு மெல்ல மெல்லச் செல்வான். தன் பாதங்கள் எவ்வளவுக்கவ்வளவு வெட்டுண்டு நோதல் அடைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவுதான் பரிசுத்தனாக ஆகிறான் என அறிவான். நிர்வாணம் அடையுமுன் இவன் பிறப்புக்கள் சொற்பகாலமானவைகள் எனவும்,ஏழேயாம் எனவும், இவன் அறிவான.

86. இதுதான்தியாந நெறிமுறை;யோகியின் லக்ஷியம். இதுவே.சுரோதபதிகள் கோரும் ஆநந்தமயமான எல்லையாம்.

87. அர்கத் நெறியை அடைந்தால் இவ்விதமன்று.

88. அந்நிலையில் கிலேசமுற்றும் அற்றுப்போயிற்று. ஜீவித்திருக்க வேண்டுமென்ற திருஷ்ணை வேரோடு போய்விட்டது, பிறப்பினும் ஆசையின் வித்துக்கள் வறுக்கப்பட்டன. இன்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். சிஷனே! அன்பை (Compassion) அழிப்பாயா? அது ஒரு குணமன்று, சீலமன்று. அன்பு என்பது தர்மங்களின் தர்மமுறை; என்றும் உள்ள நேர்மையான தன்மை; அதுவே பிரஹ்மமாம்; * எல்லையில்லாதது; எங்கும் பரவிய சத்தாம்; என்றும் எங்கும் உள்ள சத்தியத்தின் ஜோதிஸாம்; அஃது எல்லாம் நேர்மையாகவும் சரியாகவும் நடைபெறுதலுக்குக் காரணமான தர்மமாம்.

89. நீ அவ்வன்புடன் ஒருமைப்பட, ஒருமைப்பட, நீ அதனுடன் உருகி இரண்டறக் கலப்பாய். அதனால் நீயே பூர்ணமாக அன்புவடிவாக அமைவாய்.

---

* அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பேசிவமாம்—திருமூலர்.

90. இஃது ஆரிய மார்க்கம். இது பூர்ணர்க ளான புத்தர்கள் நடைபெறும் மார்க்கம்.

91. இதைப்பற்றி திவ்விய கிரந்தங்கள் எவ்வி தம் உபதேசிக்கின்றன என்பதைக்கேள்:—"ஓம்! அர் ஷத்துக்கள் எல்லாரும் நிர்வாணபதத்தின் இனிய பழத்தை பெற்றார் இல்லை! ஓம்! எல்லா புத்தர்களும் நிர்வாண தர்மத்தில் நுழைந்தார் இல்லை" என நான் நம்புகிறேன்.

92. ஆம், ஆம், ஆரியமார்க்கத்தில் இனிமேல் சுரோதபதியாக நீ இல்லை. நீ புத்தனாகவேண்டிய வன். போதிசத்வாவாகிறாய். நதியைத்தாண்டிவிட் டாய். தர்ம காயகோசத்தை அணிய உரியவனாகி றாய். ஸம்போககாயம் நிர்வாணநிலையைவிட உயர் நலமுள்ளது. நிர்மாணகாயம் இன்னும் அதிக உயர்நலமுள்ளது. இதுவே அன்பு ஆர்ந்தபுத்தரின் நிலைமை! *

---

* அர்ஷன்—என்ற நிலைமையை பெற்றவர் தர்மகாயம் என்ற அங்கியைதரிக்க உரியர் அப்படிதரித்துவிட்டாராகில், அவர் உலக சம் பந்தம் முற்றும் விட்டவராவர். அவரால் உலகத்திற்குயாதொருவித மான பிரயோஜனமும் இல்லாமற்போய்விடும். அதனால், "பஹார

93. இப்போது தலைவணங்கி நன்றாய்க்கேள். அன்பே!சுவரூபம் எடுத்து பேசுகிறது—"ஓ! போதீ சத்வரே! ஜீவ கோடிகள் எல்லாம் துக்கத்தால் வருந்த, நீவிர்மாத்திரம் தனித்து சுகிர்தம் பெறுவிரோ? உலகம், ஓ என்று கதற, நீவிர் மாத்திரம் ஆநந்தம் அடைவதும் மோக்ஷம் பெறுவதும் எங்ஙனம்?"

94. இதை இப்போது கேட்டிருக்கிறாய்.

95. ஏழாம்படியையும் நீ அடையலாம். பூர்ணப் பிரஞ்ஞை என்றவாயிலையையும் தாண்டலாம். ஆனால் துக்கத்துடன் மணம் புரிதல் தான் ஏற்படும். ததா

---

கருணையால் அந்த தர்மகாயம் என்ற அங்கியை தரிக்காமல், நிர்மாணகாயராகவேனும், சம்போககாயராகவேனும் இருப்பர். நிர்மாணகாயர்—என்றால் உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு உயர் நலம் அமைந்த நிர்வாணத்தைத்துறந்து, வேண்டும் காலத்தில் உலகத்தில் சூக்ஷ்ம சரீரம் எடுத்துக்கொண்டு தோன்றுவர்.

ஸம்போககாயர் என்றால், சூக்ஷமசரீரம் கொண்டு உலகத்தில் தோன்றிடார். ஆனால் திவ்விய தேஜோமய சரீரத்துடன், ஏகதேசம் உலக க்ஷேமத்தைப்பற்றிய கவனமுள்ளவராய் அருள்பிரஸாதத்தை உலகத்திற்குசெய்து வருவார்.

தர்மகாயர்—என்ற பதவியை அடைந்தால், பூர்ணபுத்தராவர். உண்மையில் காயம்—சரீரமன்று, இல்லை. தர்மகாயம் என்பது பரமாத்மாவுடன் இரண்டறக்கலந்தநிலை. உலகத்தின் எவ்விதநினைப்பும் அற்றவிடம். கௌதமபுத்தர் பரநிர்வாணம் பெற்றும், அதை வேண்டாம் எனத்தவிர்த்துப் பரமகருணையால், நிர்மாணகாயராகவே இருந்துள்ளார், என்பது குப்தசாஸ்திரத்தின் துணிபு.

கதராக, ஆகவேண்டுமோயின், உன் பூர்வீகர்கள் நடந்தமார்க்கத்தை அனுசரிப்பாய். முடிவில், முடிவு கிட்டும்வரை, சுயநலம் பாராட்டாதே.

96. புத்தர் ஆகிவிட்டாய். இனிநடக்கவேண்டிய நெறியைத் தெரிந்துகொள்.

97. கிழக்கைநோக்கிப்பார். சாந்தமான குளிர்ந்த ஜோதியின் வெள்ளம் கீழ்திசையில் பெருகின்றது பார். அக்காக்ஷி மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒன்ருகி ஸ்துதி செய்தாற்போலத் தோன்றுகிறது. வியக்தப்பட்டிருக்கின்ற நாலுவித மூர்த்தங்களான, ஜ்வலிக்கின்ற அக்னி, ஓடுகின்ற ஜலங்கள், வாசனைவீசும்பூமி, சலிக்கின்ற வாயு, இவைகள் அன்பு ஆர்ந்தகாநத்தை கோஷிக்கின்றன.

98. கவநமாய்க்கேள்! வெற்றிபெற்ற தீரன் ஸ்நாநம்செய்யும் சுவர்ணமயமானஜோதிஸானசுழலினின்று, தோன்றி ஆயிரக்கணக்கான ராகங்களால், பிரபஞ்சத்தின் அந்தர்யாமியாக இருக்கின்ற "மாற்றம் கடந்த" வாக்கு அடியில் வருமாறு அறிவிக்கின்றது:—

மரண தர்மத்துக்குள்ளான மனிதர்காள்!

உங்களுக்கு ஆநந்தம், பரமாநந்தம் உண்டாகும்.

அக்கரையினின்று ஒரு பிரயாணி திரும்பி இருக்கின்றான், அறிமின்.

ஒரு நூதன அர்ஹன் பிறந்திருக்கிறான்!

—o—

எல்லாப் பிராணிகளும் சாந்தி பெறுவாராக.

ஓம் தத் ஸத் ஓம்.

முற்றும்.

ஓம்.

குருப்யோநம:

# உயர்நலமமைந்த தர்மமுறைகள்.

---o---

1. சுத்தமான வாழ்வும்,

2. கபடமற்ற மநசும்,

3. தூய்மையாம் நெஞ்சும்,

4. அறியவிரும்பும் இயல்பும்,

5. யாவருடனும் ஸகோதர நேசமும்,

6. நீதிமுறைகற்பித்தலிலும், பெறுதலிலும் அவாவும்,

7. உள்ளத்தில் மறைவில்லாஞாநஎழுச்சியும்,

8. தீவிர குருபக்தியும்,

9. எவ்விதக்கொடுமை நேரினும் ஈசன் செயலெனக்கொள்ளும்தெளிவும்பொறுமையும்,

10. உண்மைகளைத் தைரியமாய் உரைத்திடும் திறனும்,

11. அநியாயமாய்த் துன்பப்படுத்தப்படுபவருக்கும், நிந்திக்கப்படுபவருக்கும், தைரியமாய் உதவி புரிதலும் ஆதரவு செய்தலும்,

12. பிரஹ்மவித்தையில் உபதேசித்துள்ள உயர்நலம்அமைந்த கருத்தான ஜநசமூகத்தின் அபி விருத்தியில் இடைவிடாமல் கண்ணோக்காய் இருத் தலும்,

13. குருவினிடமும் அவர் உபதேசத்திலும் நன்னம்பிக்கை உண்டாக, அந்நிமிஷமே அதுவே கதியெனவிருக்கும் மெய்யுறுதியும்,

14. இவை பிரஹ்மஞாநமென்ற ஆலயத் திற்கு, ஞாநமுறையில் பயில்கின்றவர்கள் ஏறும் வழியின் சுவர்ணப் படிகளாம்.

---

சுபமஸ்து.

---

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையி
ஆதரவின்மேல்மதுரையில் பிரசுரமாகிநடைபெற

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திர
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B.L., F.T.S. } திபர்.

வருஷசந்தா ரூ 2. தனிப்பிரதி அணா

## புஸ்தகம் துண்டுபத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| பிராசீனதர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6- |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-8- |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4- |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4- |
| அவதாரங்களின் உண்மை. | 0-8-0 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்தம் | 0-0- |
| இந்திய புத்திரர்களின் சங்கம் [முறைகளும் | 0-0- |
| பிரஹ்மஞானசபை | 0-0-1 |
| ஷை யந்திரம் | 0-0- |
| பிரஹ்மவித்யை | 0-0- |
| ஷை ஆங்கிலத்தில் | 0-0- |
| அஷ்டமிபிரதக்ஷணம் | 0-0-1 |
| மௌநவாக்கு (the Voice of the Silence) | 0-2- |

ப. நாராயண அய்யர்,
பிரசிடெண்டு, பிரஹ்மஞானசபை, மதுரை.